19 வது வருடத்தில்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338
416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 19 பாலம் 10 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 15, 2009

# அடங்காப்பற்றில் ஒன்ராரியோ நாடாளுமன்ற உறுப்பினர்கள்

ரொறொன்ரோ நகரில் மே 13ந் திகதி நடைபெற்ற அடங்காப்பற்று நிகழ்வில் கிட்டத்தட்ட ஒரு இடச்சம் மக்கள் பங்குபற்றினர். பல தொலைக்காட்சி நிறுவனங்கள் (CP24, CTV) உலங்குவானூர்தி இல் இருந்து நேர்முக வர்ணனை செய்தன. CBC நிறுவனமும் இந்நிகழ்வை அடிக்கடி ஒளிபரப்பிக்கொண்டு இருந்தது. "Beaches - East York" தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய ஜனநாயகக்கட்சியின் ஒன்ராரியோ நாடாளுமன்ற உறுப்பினர் Michael Prue அடங்காப்பற்று நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது "உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் எந்நேரமும் கொல்லப்படலாம் என்ற நிலையில் நீங்கள் இங்கு வந்து ஜனநாயகமுறையில் உங்களது உணர்வுகளை தெரிவிப்பது மிகவும் சரியானது" என்றார். "Hamilton East - Stoney Creek" தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய ஜனநாயக கட்சியின் ஒன்ராரியோ நாடாளுமன்ற உறுப்பினர் Paul Miller உரை நிகழ்த்தும் போது "இலங்கையில் நடைபெறுவது முற்றுமுழுதான மனிதாபிமானமற்ற நிகழ்வு. கனடிய அரசாங்கத்திற்கும் ஐக்கியநாடுகள் சபைக்கும் இலங்கையில் நடைபெறும் அநியாயங்களை நிறுத்தக்கூடிய பலம் உள்ளது. உங்களது போராட்டங்களை தொடர்ந்து நடத்துங்கள்" என்றார். இந்நிகழ்வில் கனேடிய உணவு வங்கிக்கு கொடுப்பதற்காக உலர் உணவுப்பொருட்களும் சேர்க்கப்பட்டது.



சஸ்கச்சுவான் மாகாணத்தில் இருந்து கல்விச் சுற்றுலா வந்த ஒரு பாடசாலையின் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு அவர்களின் ஆசிரியர் Dave Crowell தமிழரின் அடங்காப்பற்று நிகழ்வை பற்றி எடுத்துக்கூறுகையில் "இக்கணத்தில் நாங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் நிற்கிறோம். இது ஒரு அமைதியான பேரணி. இவ்வாறுதான் ஒரு நாட்டில் வாழும் சிறுபான்மை இனம் தமது கருத்துக்களை ஏனையோருக்கு தெரிவிப்பர்" என்று ஜனநாயகம் பற்றிய பாடத்தை தனது மாணவர்களுக்கு புகட்டினார்.

நகர்காவலர்களின் தலைமை அதிகாரி Bill Blair அடங்காப்பற்று நிகழ்வில் பத்திரிகையாளர்களுடன் உரையாடுகையில் "நாங்கள் மக்கள் எல்லோரையும் தங்கள் பிரச்சினைகளை அமைதியான முறையில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு எடுத்துக்கூறுவதற்கு ஊக்குவிக்கிறோம். இவ்வாறு பேரணி நடத்துபவர்கள் கட்டாயமாக சட்டவிதிகளை மதிக்க வேண்டும். மக்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியம்" என்றார். கனேடிய அமைதிக்கான கட்டமைப்பு (Canadian Peace Allaince) சேர்ந்த Sid Lacombe தெரிவிக்கையில் "நாங்கள் இந்தப் பேரணியில் கலந்து கொள்வதற்கான காரணம் கனடிய அரசாங்கத்திற்கு இது ஒரு தமிழர்கள் பிரச்சினை மட்டும் அல்ல. இது ஒரு மனிதாபிமான பிரச்சினை என்று தெரிவிப்பதற்கே" என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் 15 வருடங்களுக்கு முன்னர் இப்படியான இனஅழிப்பு Rwanda இல் நடைபெறும்போது ஒரு நாடும் எதுவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. அது ஒரு படிப்பினையாக எடுத்துக் கொண்டு இந்த மனிதாபிமான பிரச்சினையில் உலக நாடுகள் தலையிட வேண்டும்" என்றார்.

Code Pink எனப்படும் பெண்களின் அமைதி அமைப்பை (Women's Peace organization) சேர்ந்த Andrea Peloso கூறுகையில் "ஒருவருக்கும் தெரியாமல் ஒரு இனஅழிப்பு இலங்கையில் நடைபெறுகின்றது. நாங்கள் ஊடகவியலாளர்களை போர் நடைபெறும் இடத்திற்கு அனுமதிக்க மறுக்கும் இலங்கை அரசிற்கு எதிர்ப்பை தெரிவிப்பதற்காக இப்பேரணியில் கலந்து கொள்கிறோம்" என்றார்.

ஒன்ராரியோ நாடாளுமன்ற முதல்வர் Dalton Mcguinty மே 13ஆம் திகதி காலை பத்திரிகையாளர்களுக்கு கூறுகையில் "இலங்கையின் வடபகுதியில் 100 க்கு மேற்பட்ட சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளார்கள். இதனால் இங்குள்ள தமிழ் மக்கள் கவலையும் ஆத்திரமும் அடைந்துள்ளார்கள். ஐக்கியநாடுகள் சபை இலங்கையில் இரத்த ஆறு ஓடுவதாக தெரிவித்துள்ளது. இந்த விடயத்தில் இந்த உலகில் வாழும் மக்களாகிய எமது கடமை என்ன?" என்று வினாவினார். அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் மக்களை சட்ட விதிகளை மதித்து Queen's Park இல் நின்று பேரணியை நடத்துமாறு கேட்டுக்கொண்டார்.

ஒன்ராரியோ முதல்வரின் மகள் இலங்கையில் தொண்டராக ஒருவருடம் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. முதல்வரிற்கு இலங்கைத்தமிழ் மக்களின் பிரச்சினை நன்றாகத்தெரியும். ஒன்ராரியோ மாகாண ஆளும் கட்சி ஒன்ராரியோ நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் சேர்த்து கனேடிய மத்திய அரசை இலங்கைப்பிரச்சினையில் தலையிட உலகநாடுகளை வற்புறுத்த வேண்டுமென ஒரு பிரேரணையை கொண்டுவர முயன்றது. இது எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் நடைமுறைப்படுத்த முடியாமல்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!

Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

RBC Royal Bank


Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

SATHYA SAIRAM DRIVING SCHOOL

• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

ONTARIO FLORISTS
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, கோவில் மாலை, Funeral services ஆகியவற்றிக்கு வேண்டிய அனைத்து பூத்தேவைகளும் பூர்த்தி செய்து தரப்படும்.
கோவில்களுக்கு ஒரு வருடம் மாலை பெற்றால் 3 மாதம் இலவசம்.
அழைக்கவும்: 647.351.0799
24 HRS. SERVICE
2625 Eglinton Ave. E, #6


REALTY EXECUTIVES
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
HSBC Tower, Liberty Square 3601 Highway 7 East, Suite 1005 Markham ON L3R 0M3

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

பங்குச்சந்தை கடந்த ஒரு மாதமாக மேல்நோக்கிச்சென்று கொண்டிருந்தது. சுமார் 30 சதவீதம் பங்குச்சந்தையில் விலைகள் உயர்ந்தன. பங்குச் சந்தையில் இழப்பைச் சந்தித்திருந்த பலருக்கும் இது சற்றே மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கக்கூடும். ஆனாலும் பலபேருக்கு இழப்பு முழுவதும் ஈடுகட்டப்பட்டிருக்காது. இந்தக் கட்டுரை எழுதப்படும் தினத்தில் (மே 13) சந்தையில் சற்றே வீழ்ச்சி தெரிகின்றது. இந்த வீழ்ச்சி ஓரிரு தினங்களுக்குத் தொடரலாம் அல்லது அதற்கு மேலும் தொடரலாம். பங்குச் சந்தையில் விலைகள் எப்போதுமே ஏறிக்கொண்டிருக்கும் என்று யாராவது நினைத்தால் அவர் அடிப்படையையே புரிந்து கொள்ளவில்லை என்று தான் பொருள். இந்த வீழ்ச்சி பலரும் விலை ஏற்றத்தை ஆனால் வரும் லாபத்தைத் தக்க வைத்துக்கொள்ள விற்கத் தலைப்பட்டதினால் வந்தது என்றும் கருதப்படுகின்றது. பங்குச் சந்தையில் விலைகள் எந்தப்பக்கம் செல்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கின்றது என்பதே உண்மையான நிலையாக இருக்கக் கூடும். இப்போது வெளிவரும் புள்ளி விவரங்களையும்



செய்திகளையும் பார்த்தால் பொருளாதாரம் முன்னர் எதிர்பார்த்ததை விட விரைவிலேயே தற்பொாது இருக்கும் இந்தச்சூழ்நிலையிலிருந்து விடுபடக்கூடும் என்ற நம்பிக்கை நேகைகளும் தென்படாமல் இல்லை. முன்னர் இரண்டு ஆண்டுகள் வரை ஆகும் என்று பலரும் நம்பினார்கள். இப்போது ஓராண்டிலேயே நூகூட திருப்பு முனை அமையலாம் என்றே தோன்றுகின்றது. விலைகள் குறைய இருக்கும்போது வாங்க வேண்டும். விலைகள் கூடுதலாக இருக்கும்போது விற்க வேண்டும் என்பது எல்லோருக்குமே தெரிந்த பொதுவிதி. ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதில்தான் பலருக்கும் தைரியம் வருவதில்லை. ஏனென்றால் நாம் நினைப்பதற்கு மாறாகவும் நிகழ்வுகள் நிகழலாம்.

இப்போது பலரையும் பாதித்திருப்பது வீட்டுக்கடன் வட்டி வீதங்கள் தான். சென்ற கட்டுரையைப் படித்த பலபேர் தங்கள் சொந்த அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டனர். என்னுடைய ஆலோசனையை கேட்டவர்களும் உண்டு. குறிப்பாக நிலையான வட்டியில் வீட்டுக்கடன் வைத்திருப்பவர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். நான் 5 சதவீதம் வட்டி கொடுக்கின்றேன். என் பக்கத்து வீட்டுக்காரர் வெறும் 1.5 சதவீதம் வட்டி கொடுக்கிறார். வங்கியில் மாற்றித்தரச் சொல்லிக்கேட்டால் அபராதத் தொகையை 6000, 8000, 10,000 என்று மனம் போனபடி சொல்கிறார்களே என்று அங்கலாக்கிறார்கள்.

நான் முன்னர் கூறியதைத்தான் திரும்பச் சொல்ல வேண்டும். "விலைகள் குறைய இருக்கும் போது வாங்க வேண்டும். விலைகள் கூடுதலாக இருக்கும்போது விற்க வேண்டும். இது எல்லோருக்குமே தெரியும். ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதில் தான் பலருக்கும் தைரியம் வருவதில்லை. நாம் நினைப்பதற்கு மாறாகவும் நிகழ்வுகள் நிகழலாம்.

நிலையான வட்டியைத் தேர்ந்தெடுத்த போது நீங்கள் "ரிஸ்க்" எதுவும் எடுக்க விரும்பவில்லை. உங்கள் பக்கத்து வீட்டுக்காரரோ "ரிஸ்க்" எடுத்துக்கொள்ளத் தயாராக இருந்தார். அதனாலேயே அவர் மாறும் வட்டியைத் தேர்ந்தெடுத்தார். நீங்கள் நிலையான வட்டியைத் தேர்ந்தெடுத்தீர்கள். அவரு எடுத்த "ரிஸ்க்" இப்போது நல்ல பலனைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலைக்குக் காரணம் திறமை அல்ல. சந்தர்ப்பம். நாளை எப்படி இருக்கும் இன்றே துல்லியமாகத் தெரிந்துவிட்டால் பலபேர் மில்லியனர்களாக இருப்பார்கள்.

எந்தச் சூழ்நிலையிலும் தகுந்த யுக்திகளின் பேரில் சிரமத்தைச் சற்றே குறைத்து கொள்ளவும். லாபத்தைச் சற்றே அதிகரிக்கவும் அல்லது நட்டத்தைச் சற்றே குறைத்துக் கொள்ளவும் இயலும். உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற ஆலோசனை பெற இக்கட்டுரை ஆசிரியருடன் ஸ்கோஷியா வங்கியில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்: 416.439.3040 ext.2010



**பெரி. முத்துராமன்**

## காப்புறுதி மூலதனமும்

காப்புறுதியை பற்றி கூறினால் இங்கு பலர் சொல்வார்கள் நாள் இளமையாக இருக்கிறேன். நான் நல்லதிட காத்திரமாக ஒரு நோய் இல்லாமல் இருக்கிறேன். நான் இதுவரை காலமும் ஒரு டாக்டரிடமும் செல்லவில்லை. ஆகவே எனக்கு காப்புறுதி எதற்கு தேவை என்று கேட்பார்கள்.

உண்மை என்னவெனில் அவர் கூறின அந்த முக்கிய மூன்று காரணங்களிற்காகத் தான் அந்த நபர் காப்புறுதியை அடுத்து வைத்திருப்பது மிகவும் நல்லது.

ஏனெனில் நீங்கள் இளமையாகவும் நோய் இல்லாமலும் இருக்கும்போது உங்கள் மாத கட்டணம் மிக குறைவாக இருக்கும், அத்தோடு மாத்திரம் அல்லாமல் நீங்கள் இளம் வயதிலேயே உங்கள் நிரந்தர ஆயுள் காப்புறுதியை கட்டி முடிக்க கூடிய வசதியும் உண்டு. அடுத்து டாக்டரிடம் இதுவரையும் போகவில்லை என்பது அது நோயின்மைக்கு ஆதாரம் அல்ல. அந்த நோயின் அறிகுறிகள் எமக்கு வெளியில் தென்படவில்லை என்பது உண்மை. ஆகவே நாம் ஒவ்வொருவரும் எமது குடும்ப வைத்தியரிடம் வருட உடல் பரிசோதனை செய்து உடலை நோயின்றி காப்பதே நாம் எமக்கு செய்யும் சிறந்த பணியாகும்.

இலவச ஆலோசனை தொடர்பிற்கு
Jey Ahamparam, P.F.P
Insurance Advisor
416.301.1733


நிப்ளக்ஸ் REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS

MORTGAGE CONSULTANT
•Experienced • Reliable • Trustworthy
For your Mortgage and Secured Line of Credit
Pl. Call: Raymond Liu
(Manager, Residential Mortgages)
Tel.: 416.618.2132 Cell: 416.614.5446
raymond.liu@td.com www.tdcanadatrust.com/msf/raymondliu





METRO APPLIANCES SALE & SERVICE LTD
Sale up to 80% off till. May 31, 2009
• Fridge • Dish washer
• Stove • Microwave
• Washer • Dryer
• Many More
புதிதாக வாங்குவதற்கும் திருத்த வேலைகளுக்கும் அழைக்கவும். பாவித்தவைகளும் விற்பனைக்கு உண்டு.
674 Kennedy Road (kennedy & Eglinton)
416.454.4466 /416.298.4800







விளம்பரம் VLAMBARAM
விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.


**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.


Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com




Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666




# கணினி வகைகள்

மின்னணுக் கணினிகளை அவற்றின் செய்பாட்டு கோட்பாடு அல்லது அமைப்பு வழியில் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். அமைப்பு என்னும் போது, அளவு, வேகம், நினைவக அளவு போன்றவை கணக்கில் எடுத்து கொள்ளப்படும்.

செயல்பாட்டு கோட்பாட்டுவழி வகைப்படுத்தல் ஒப்புமை வகை (Analog), இலக்கவகை (Digital), கலப்பின வகை (Hybrid) என மூன்று வகைகள் இதில் உள்ளன. ஒப்புமை வகை.




தொடர்ந்து மாறும் மதிப்புகளைக் கொண்டு செயல்படும் விதம் இந்தக் கணினிகளுக்கு அடிப்படை. வோல்டேஜ் (Voltage), வேகம் (Speed), வெப்பம், (Heating), அழுத்தம் (Pressure) போன்றவை தொடர்ந்து மாறும் தன்மை பெற்றவை. இவற்றை அளந்தலில் துல்லியம் சற்று குறைவாக இருப்பதால், இந்த வகையில் வரும் விடைகள் சற்று தோராயமாகத்தான் இருக்கும்.

**இலக்க வகை**

0-1, மெய் - பொய், சரி - தவறு அல்லது உண்டு. இல்லை என்ற இருநிலை கோட்பாட்டின் அடிப்படையில் செயல்படுவது இலக்க வகைக்கணனியாகும். இரு நிலைகளில் எது என்பதை சரியாகக் கணக்கிட முடியும். இதனால் விடைகள் துல்லியமாகக் கிடைக்கும்.


**- Bala -**

*A1 Ink Rainbow Inc.*

Email: balag2005@yahoo.com


தொழில்நுட்பத் துறையில் பல கணிப்புகளும் எண்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. எண்கள், உரை என்ற எல்லாமும் சுழி அல்லது சூன்னியம் (0), ஒன்று (1) என மாற்றப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. இதனால்தான் ஆராய்ச்சி, தொழில்நுட்பம், வடிவமைப்பு, தகவல், அலசல் போன்ற பல இடங்களிலும் இலக்க வகைக் கணிபொறி பயன்படுகிறது.
ஒரு தனிப்பட்ட சிக்கலை தீர்ப்பதற்கென்றே ஒரு இலக்கவகை கணினியைக் கட்டலாம். அது சிறப்பு செயல்பாட்டு கணினி எனப்படும். பொதுவான நோக்கில் பல சிக்கல்களையும் தீர்ப்பதற்காக உருவாக்கப்படுவது பொதுநோக்கு கணினியாகும். இது கொடுக்கும் நிரலைச் செயல்படுத்தி எந்த சிக்கலையும் தீர்க்கும். இன்று நாம் பார்க்கும் பல கணினிகளும் இந்த வகைக்கு உட்பட்டது ஆகும்.


**கலப்பினம்**

ஒப்புமை மற்றும் இலக்க வகை என்ற இரண்டின் சிறப்புத் தன்மைகளையும், தேவைக்கேற்ப பயன்படுத்தி, இரண்டும் இணைந்த வகையில் உருவாக்கப்படுவது கலப்பின வகை. தேவைப்படும்போது ஒப்பவகைத் தரவுகளை இலக்க வகைத் தரவு ஒப்புமை வகையாகவும் மாற்ற சுற்றுகள் உள்ளன.

ஒரு எடுத்துக்காட்டினைப் பார்ப்போம். மருத்துவமனையின் சிறப்பு பராமரிப்பு பிரிவில் ஒருவருடைய இரத்த அழுத்தம், உடல்சூடு, இதயத்துடிப்பு போன்றவை தொடர்ந்து அளக்கப்படுகின்றன. இவை ஒப்புமை வகை தகவல்களைத் தரும். இந்த கருவிகளால் இவை ஒரு கணினிக்குள் அனுப்பப்படுகின்றன. அவை இலக்கவகையாக மாற்றப்பட்டு வைக்கப்படுகின்றன. இவற்றை ஒரு நிரல் கண்காணித்துக் கொண்டே இருக்கும். நிலைமை மாறினால் தேவையான தரவுக் குறிப்புகளைக் கொடுத்து மருத்துவர்களுக்கு தெரிவிக்கும். இந்த அமைப்பு இரு வகைகளும் சேர்ந்து ஒரு தனிப்பட்ட செயல்பாட்டினை செய்வதை காட்டுகிறது.

**அமைப்பு வழி வகைப்படுத்தல்**

செயல்திறன், அளவு, வேகம், விலை போன்றவற்றை வைத்து இலக்க கணினிகளை நான்கு வகைகளாக பிரிக்கலாம். அவைகளை கீழ்கண்ட வகைகளாக பிரிக்கலாம்.




1. மீக் கணினி (Super Computer)
2. முதல்நிலை கணினி (Main Frame Computers)
3. சிறு கணினி (Mini Computers)
4. நுண்கணினி (Micro Computers)

**மீக் கணினி *(Super Computers)***



திறன் மற்றும் விலையில் மிக உயர்ந்தது ஆகும். ஒரு வினாடியில் பலபல கோடிச் செயல்கூறுகளை செய்யும் வலிமை படைத்தது. மிக அதிக கணித செயல்பாடுகள் தேவைப்படும் துறைகளில் இதன் பயன்பாடு இன்றி அமையாத-தாக இருக்கும். குறிப்பாக பங்குசந்தை ஆராய்ச்சி, திரைப்படங்களுக்கான சிறப்பு காட்சிகள் அமைப்பு, வானிலை நிலையங்கள், நுட்பமான கலை படைப்புகளுக்கு இந்த கணனி பயன்பாடு மிகுந்து காணப்படுகிறது.

**முதல்நிலை கணனி**


உருவத்தில் பெரியதாக இருக்கும். வினாடிக்கு சில கோடி செயல்களை செய்யும் திறன் படைத்தது. இவற்றின் விலை மிகவும் அதிகமாக காணப்படுகிறது. இருந்து இந்த கணனியின் தரவு விரைவாக அலச உதவும். வங்கிகள், விமானசேவை, இரயில் சேவை, விமான கட்டுமானம், விமான வடிவமைப்பு, கப்பல் வடிவமைப்பு போன்ற துறைகளில் இதன் பங்கு இன்றியமையாதது ஆகும்.

**சிறு கணினி *(Mini Computers)***



முதல்நிலை கணினியில் விலை அதிகமாக இருந்ததால் இந்த கணினியை உருவாக்க முயன்று விலையை குறைத்தார்கள். அதன் பயனான பல பகுதிகள் இதன் அடிப்படை கூறுகளில் இருந்து குறைக்கப்பட்டன. இதன் காரணமாக, வன்பொருள் விரைவாகச் செய்யும் பல வேலைகளை மென்பொருளால் சற்று மெதுவாக செய்யப்பட்டன. இதனால் முதல்நிலை கணினியைவிட விலையிலும், தரத்திலும் இது குறைந்தது. ஆனால் இதைவிட விலையில் மிகவும் குறைந்த நுண்கணிப்பொறிகளின் ஆதிக்கம் அதிகரித்ததும், சிறு கணினிகள் அவ்வளவாக விற்பனையாவதில்லை.

**நுண்கணினி *(Micro Computers)***




மைய செயலகம் முழுவதையும் அடக்கிய ஒரே சில்லான நுண் செயலி, நுண் கணினி உலகுக்கு அறிமுகப்படுத்தியது. நுண் கணினி சிறு கணினியை விட பல மடங்கு விலை குறைவு. நுண்கணினி மேலும் பலவகைகளாக பிரிக்கலாம். அவையான பணிநிலையம் தன்னுடமை கணினி, மடிக்கணினி மற்றும் அதிலும் மிக சிறியது கையடக்க கணினி எனப் பல பிரிவுகளாக பிரிக்கலாம்.

உருவமும் செயல்பாடும் வேறுபட்டாலும் எல்லா கணினிகளுக்கும் ஒரு பொதுவான அம்சம் உண்டு. அவை உள்ளீடு, செய்பாடு, தேக்கம் மற்றும் வெளியீடு ஆகும். இதன் செயல்திறன் மற்றும் வடிவமைப்புகளை நாம் அடுத்த இதழில் காணலாம்.


**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

***Very respectfully instructor to ladies.***

உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்
நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்



**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**

*Get your G licence through me.*
*If you fail G test, we will pay your test-booking fee.*
(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

சேவைகள்: *Brampton - Mississauga - Toronto*

***Road test available in out cities***

**APPLEMORE AUTOMOTIVE**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing


**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# நல்லவை தீயவை உலகைப் பிளப்பவை

## ஒன்று தீயது என்று சொன்ன வினாடியிலிருந்து அதை வெறுப்பதை உங்களால் தவிர்க்க முடியாது.




**சத்குரு வாசுதேவ்**

மனிதர்கள் எப்போதும் தாங்கள் நல்லவர்கள் என்றும் மற்றவர்களெல்லாம் தீயவர்கள் என்றும் நம்புகிறார்கள். அப்படித்தான் இந்த உலகில் அவர்களால் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிகிறது. இமயமலையின் பாதையில் நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். அதை இப்போது இருவழிச் சாலையாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் நிலச்சரிவின் காரணமாகவும் சாலைகளைத் தாண்டி வாகனங்கள் விழுவதாலும் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வளைவுகளில் பயணம் செய்வது ஆபத்தானது. ஒரு சிறு தவறு நேர்ந்தாலும் அதோகதி தான். இங்கே நீங்கள் பயணம் செய்கிறபோது ஓட்டுநருக்கு மிகப் பெரிய பொறுப்பைத் தருகிறீர்கள். அவர் ஒரு சிறு தவறு செய்தாலும் உங்கள் வாழக்கை முடிந்துவிடும். ஒவ்வோர் ஆண்டும் பலரும் அத்தகைய தவறுகளைச் செய்கிறார்கள். சாலையோரங்களில் உலோகக் குவியல் ஏதாவது உங்கள் கண்ணில்பட்டால் அது நொறுங்கிப் போன வாகனமாகத் தான் இருக்கும்.

எனவே அதனை இப்போது இருவழிச்சாலை ஆக்குகிறார்கள். இது நல்லதா? தீயதா? உங்களைப் போன்றவர்கள் இன்னும் வசதியாகப் பயணம் செய்யலாம். ஆபத்து குறைவு. எனவே இது நல்லது என்று நினைப்பீர்கள். இன்று பலரும் சாலைகள் அமைப்பதையும், மலைகளின் வடிவத்தைக் கெடுப்பதையும், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகளுக்கு இடையூறு தருவதையும் எதிர்க்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை இது தீமையான செயல். அதிகாரத்தில் இருப்பவர்களோ,< பெரும்பான்மையானவர்களோ ஏதோவொன்றை நல்லது என்று நினைப்பதால் அது நல்லதாகி விடாது. வேண்டுமானால் ஒரு மனிதனை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். ஒரு பயங்கரவாதி செய்பவை நன்மையானவையா? தீமையானவையா? அது தீமையானது என்று நீங்கள் சொல்லலாம். அதே நேரம் எது நல்லது எது தீயது என்பதெல்லாம் நீங்கள் எந்த அணியில் இருக்கிறீர்கள் என்பதைச் சார்ந்தது. இந்தியா நல்லதா? பாகிஸ்தான் நல்லதா? என்று கேட்டால் நீங்கள் எல்லைக் கோட்டின் எந்தப் பகுதியில் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே பதில் அமையும். இந்தப் பகுதியில் இருக்கிறீர்கள் எனவே இந்தியா நல்ல என்று கருதுகிறீர்கள். பாகிஸ்தானியர்கள் தீயவர்கள் என்று கருதுகிறீர்கள். அடுத்த பகுதியில் இருந்தால் அந்தப் பக்கத்திற்கு ஆதரவாக வாதிட்டுக் கொண்டிருப்பீர்கள். நல்லது, தீயது என்பதெல்லாம் உங்கள் அடையாளங்களைப் பொறுத்தவை. அவற்றைக் கடந்து உங்களால் சிந்திக்க முடியவில்லை.

> தொடர்புகளுக்கு: 416.300.3010
> website: www.ishafoundation.org
> www.ishayoga.org

எண்ணங்கள் அடையாளங்களின் எல்லைக்கு உட்பட்டவை. அடையாளங்கள் எப்போதும் குறுகியவை. எனவே உங்கள் எண்ணங்களும் குறுகியவை. இந்தக் குறுகிய நிலையில் இருந்து கொண்டு எது நல்லது? எது தீயது? என்று முடிவு செய்கிற அபத்தத்தில் ஏன் இறங்குகிறீர்கள். ஒன்றைத் தீயது என்று சொன்ன மாத்திரத்தில் அது உங்களுக்குப் பிடிக்காமல் போகும். இவர் ஒரு தீய மனிதர், ஆனாலும் பரவாயில்லை என்று உங்களால் சொல்ல முடியுமா என்ன? மேலோட்டமாகச் சொல்லலாம். ஆனால் அவர் உங்களை நெருங்க நெருங்க அது வெறுப்பாக வளர்ந்துவிடும். எனவே ஒன்று நல்லது தீயது என்கிற அடையாளத்திற்குள் நீங்கள் சிக்கிக் கொள்கிறபோது உலகத்தைப் பிளவுபடுத்துகிறீர்கள். என்னிடம் யாராவது வந்து தான் ஆன்மீகப் பாதையில் நடையிட வேண்டுமென்று கேட்கிறார்கள். சரி ஒரு வாரம் இங்கே இருங்கள். என்ன செய்யலாமென்று பார்க்கிறேன் என்கிறேன். இல்லை வருகிற சனிக்கிழமை என் உறவினரின் பிறந்தநாள், நான் போக வேண்டும். மூன்று நாட்களுக்குத்தான் இங்கு இருக்க முடியும் என்று சொல்கிறார். நான் சரி என்று சொல்லிவிட்டு அப்படியானால் இந்த ஆன்மீகப் பாதையில் எவ்வளவு காலம் நடையிட விரும்புகிறீர்கள்? என்று கேட்டால் கடைசிவரை என்கிறார்கள். மூன்று நாட்களிலேயே கடைசிவரை நடையிடப் போகிறீர்களா? என்று கேட்டுவிட்டு சில விஷயங்களைச் செய்யுங்கள், பிறகு பார்க்கலாம் என்று சொன்னால் இல்லை இவையெல்லாம் எனக்குப் பிடிப்பதில்லை என்று சொல்கிறார். உடனே நான் அவரிடம் உங்களுக்கு என்னவெல்லாம் பிடிக்குமென்று ஒரு பட்டியல் கொடுங்கள். அவற்றை மட்டுமே செய்யலாம் என்றால் அவர் உட்கார்ந்து யோசித்து யோசித்து ஒரு ஐந்தாறு விஷயங்களை எழுதிக் கொண்டு வருகிறார். இவ்வளவு பெரிய பிரபஞ்சத்தில் ஐந்தாறு விஷயங்கள்தான் உங்களுக்குப் பிடித்திருக்கின்றன. இவற்றை வைத்துக்கொண்டு நீங்கள் ஆன்மீகப் பாதையில் எப்படி நடையிட முடியும்? இதற்கு எங்கே வாய்ப்பு? நீங்கள் உங்களுக்குள் நல்லது, தீயது என்று பகுக்கத் துவங்குகிறபோது உலகத்தைப் பிளவு படுத்தத் துவங்குகிறீர்கள். பிளவுப்படுத்த துவங்குகிறபோது உங்களுக்குள் ஏற்பதற்கு ஏது வாய்ப்பு? யோகாவுக்கு ஏது வழி? பிரபஞ்சத்தோடு ஒன்றாவதற்கு ஏது வழி? உண்மையைக் கண்டுபிடிக்க ஏது சாத்தியக் கூறு? உங்களுடைய பிரிவினைகள் எல்லாம் உங்கள் முட்டாள்தனத்தால் வருபவை. அவற்றுக்கும் நிதர்சனத்துக்கும் எந்த சம்பந்தமுமில்லை. உங்கள் அகங்காரத்தின் தேவைக்கேற்பத்தான் நல்லதையும் தீயதையும் நீங்கள் நிர்ணயிக்கிறீர்கள். இதன்படி போனால் வாழ்வின் இருவேறு இயல்புகளுக்குள் சிக்கிப் போவீர்கள். பிரபஞ்சத்தின் இருப்பையே நீங்கள் பிளவு படுத்கிறீர்கள். அந்த நிலையில் உங்களுக்குள் ஆன்மீகம் எழுவதற்கு வாய்ப்பில்லை.


**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



KENNEDY / SHEPPARD New Condo. 1000 sq.ft.
2 bedroom + Den. Low maintenance.

**House with Mechanic shop Scarborough**

**Church for sale Toronto**

*Buy low, Sell high - 40 years* *Low Interest*

**வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out**

*5 year plan 3.9% interest* **Power of Sale**

*Properties with Tenant's* **Pay the cost**

**What's your Risk?**

*We look after* **seniors over 70 years** *peaceful life.*

**Country Style**
*Coffee shop - Oshawa*
*Good Income*

**வீடும் வியாபாரமும் *Business Zoning***

**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)

**416.230.7820 / 905.696.7310**

HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

HOMELIFE HIGHER STANDARDS

**150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.**

# பன்றிக்காய்ச்சல் (*Swine flu*) எம்மை அணுகாத்திருக்க என்ன செய்யலாம்?

H1N1 என்ற வகையைச் சேர்ந்த வைரசுக் கிருமியே இப்பன்றிக்காச்சலுக்குரிய காரணமாகும். H1N2, H3N1, H3N2 என்ற வகையைச் சேர்ந்த வைரசுக்களும் பன்றி இனங்களிடையே பரவலாகக் காணப்படுகின்றன. மனிதரில் காணப்படும் சுரக்காய்ச்சல் வைரசுக்களும், பறவைகளில் காணப்படும் காய்ச்சல் வைரசுக்களும் பன்றிகளுக்குக் கூடத் தொற்றை ஏற்படுத்தலாம். சில சமயங்களில் பன்றிகள் ஒன்றிற்கு மேற்பட்ட வைரசு வகைகளின் தொற்றுக்கு உள்ளாகலாம். அச்சமயங்களில் வெவ்வேறு வகையான வைரசுக்களின் பரம்பரையலகுகள் கலக்கப்பட்டு ஒரு புதுவகையான கலப்பின வைரசு உருவாக-லாம். பன்றி இனத்தின் வைரசுகள் அநேகமாக பன்றிகளைத் தாக்கினாலும் சில சமயங்களின் அது மனித இனத்தையும் தொற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்து விடுகிறது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள காய்ச்சலுக்கு தடுப்பூசி நன்கு வேலை செய்தாலும் புதிதாக உருவகிக்கும் வைரசுக் கிருமிகளுக்கு அவை தொழிப்படமுடியாது போகலாம். இதன் காரணத்தால் நாம் எம்மை எப்படிப் பாதுகாக்கலாம் என்பதைக் கவனிப்போம்.

ஏற்கனவே பலகட்டுரைகள் வெளிவந்துள்ள காரணத்தால் பொதுவான பாதுகாப்பு முறைகளை சுருங்கச் சொல்லியும், மற்றும் கூறப்படாத விடயங்களை சற்று விளக்கமாகவும் தருகிறேன். வைரசுகளின் பிரதான தொழிற்பாடுகளுக்கு அதில் உள்ள புரதவகைகள் உதவுகின்றன. Hemagglutinin என்ற Ha புரதம் விலங்குக் கலங்களில் உள்ள வாங்கிகளில் ஓட்டிக்கொள்வதற்கு உதவுவதால் அது கலங்களினுள் சென்று பல்கிப் பெருகுகின்றன. இந்த புரதவகையை H-1 என்று அழைப்பர். அதேபோல் மனிதரிலோ, விலங்கினங்களிலோ பல்கிப்பெருகிய புதிய வைரசுக்கிருமிகள் அக்கலங்களில் இருந்து விடுபடுவதற்கு Neuraminidase (Na புரதம்) என்ற புரதம் உதவுகிறது. இதை N1 என்று கூறுவர். இரண்டையும் சேர்த்து H1N1வைரசுக் கிருமி எனக் கூறுவர். முதற் கூறியது போல் பலவைரசுக்களின் பரம்பரையலகுகள் கலக்கும் பொழுது விதம்விதமான H1N2, H3N1, H3N2 போன்ற வைரசுகள் உருவாகின்றன.

செந்தில்நாதன் - 416.502.9252

உலகளாவிய ரீதியில் பரவக்கூடும் என எதிர்பார்க்கப்படும் வைரசுக்கிருமியின் அமைப்பு எப்படி இருக்கும் என்று எதிர்வு கூறமுடியாது. உருவாகக்கூடிய வைரசுக் கிருமியின் வேகரம் (Virulence) மக்களிடையே காணப்படும் நேயெதிர்ப்பு சக்தி, மற்றும் நோய்க்காரணிகள் என்பனவற்றைப் பொறுத்து உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்படலாம்.

தற்சமயம் நோயை ஏற்படுத்தியுள்ள பன்றிக்காய்ச்சல் வைரசுக்கு எதிரான தடுப்பு (Vaccines) ஊசிகள் தற்சமயம் இல்லை. அதேபோல் தற்சமயம் வழக்கில் உள்ள நோயெதிர்ப்பு ஊசிகள் எவ்வளவு தூரம் உதவும் என்பதும் சரிவரத் தெரியாது. இவ்வைரசுகள் விரைவாக உருமாறக்கூடியவை.

தற்சமயம் உள்ள பன்றிக்காய்ச்சல் உக்கிரமற்றதாகவும், மருந்துகளின்றித்தானாக மாறக்கூடியதாகவும் இருக்கின்றது. நோயின் உக்கிரம் கூடுதலாக இருந்தால் அவற்றிற்கு வைரசுக்கிருமிகள் அழிக்கும் மருந்துகளை உட்கொள்ள வேண்டி வரும். வைத்தியர்கள் இதை நிர்ணயம் செய்வர். உலக சுகாதார ஸ்தாபன புதிய வைரசுக்குரிய தடுப்பூசி (Vaccine) யை தயார் செய்வது பற்றி ஆராய்ந்து வருகின்றது. தடுப்பு முறைகளை அவதானிப்போம்.



1. கைகழுவுதல், அல்ககோல் கிருமிகொல்லி மருந்துகள் பாவித்தல்.
2. இயன்றளவு தொற்றுள்ளவர்களுக்கு அருகாமையில் இருப்பதைத் தவிர்த்தல்.
3. நீரிழிவு போன்ற நோயுடையவர்கள் தமது வெல்ல அளவைக் கட்டுப்பாட்டுல் வைத்திருத்தல்.
4. மல்ரிவிற்றமின் வில்லைகள் தினம் ஒன்று பாவித்தல்.
5. புரதச்சத்து அடங்கிய இறைச்சி, மீன், பால், முட்டை, பருப்புவகைகள் என்பவற்றில் ஒன்றைத் தினசரி உணவில் சேர்த்தல்.
6. பழவகைகள், பச்சை மரக்கறிவகைகள் என்பனவற்றை உணவுடன் சேர்த்தல்.
7. போதியளவு நித்திரை (குறைந்தது 7 மணித்தியாலங்கள்)
8. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளில் பன்றிக் காய்ச்சல் பற்றி அவ்வப் போது வெளிவரும் புதினங்களை வாசித்து அறிந்து அதன்படி ஒழுகுதல்.
9. மூன்று நாட்களுக்குத் தேவையான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள், தண்ணீர், மின்கலங்கள், தேவையான பணம் என்பனவற்றை ஆயத்தமாக வைத்திருத்தல். சில சமயங்களில் பலவித கிரமங்களைத் தடுக்கும்.

## பன்றிக்காய்ச்சல் விபரம்

பன்றிக்காய்ச்சல் கிளர்ந்தெழுவதை உற்று நோக்குவதிலும், ரொறொன்ரோவில் அந்த நோயினால் பீடிக்கப்பட்டிருக்கக்கூடியவர்கள் பற்றிய அறிக்கைகளை ஆராய்வதிலும் ரொறொன்ரோ பொதுசுகாதாரத்துறை ஈடுபட்டுள்ளது. சுகாதார நெடுங்காலப் பராமரிப்பு அமைச்சு (MOHLTC), கனடா பொது சுகாதார முகமையகம் (PHAC), ஏனைய ரொறொன்ரோ மாநகரப் பகுதிகள் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து இப்பணியில் அது ஈடுபட்டுள்ளது. பெருவாரியாகப் பரவும் இத்தகைய காய்ச்சலை எதிர்கொள்ளும் ஆயத்த நிலை தொடர்பான எச்சரிக்கை மட்டத்தை உலக சுகாதார அமைப்பு (WHO) உயர்த்தியுள்ளது. பன்றிக் காய்ச்சல் பரவாது தடுக்கும் பணியில் பங்குபற்றும்படி எல்லா நாடுகளையும் மக்களையும் அது கேட்டுக்கொண்டுள்ளது.

**பன்றிக்காய்ச்சல் அடிப்படை விபரம்**

• தற்பொழுது கிளர்ந்தெழுந்துள்ள நோயில் ஒரு புதிய நுணங்கி சம்பந்தப்பட்டுள்ளது. அது பருவகால சளிக்காய்ச்சல் நுணங்கியுடன் தொடர்புடையது. பறவைகள், பன்றிகள், மனிதர்களின் சளிக்காய்ச்சல் நுணங்கிப் பாகங்களை அது கொண்டுள்ளது.
• பன்றிக் காய்ச்சலின் அறிகுறிகள், வழமையான பருவகால சளிக்காய்ச்சலின் அறிகுறிகளே. அவற்றுள் பின்வருவன அடங்கும். காய்ச்சல், தலைவலி, இருமல், தசைநார் வலி, தொண்டை அழற்சி, விறைப்பு, பலவீனம் அல்லது களைப்பு அவற்றுடன் வாந்தியும் வயிற்றுப்போக்கும் சேரக்கூடும்.
• இருமல், தும்மல் மூலம் சளிக்காய்ச்சல் ஆளுக்காள் தொற்றும். இருமலும், தும்மலும் கிருமிகளை வளியினுள் செலுத்துபவை. அவற்றை மற்றவர்கள் சுவாசிக்கக் கூடும். அவை கைகள், கருமபீடங்கள் கதவுப்பிடிகள் போன்ற வன்புறங்கள் மூலமும் தொற்றக்கூடும்.

தற்பொழுது கிளர்ந்தெழுந்துள்ள நோய் பற்றிய புதிய விபரங்களை ரொறொன்ரோ பொது சுகாதாரத் துறை அவ்வப்பொழுது வழங்கிவரும். முகமூடிகள் அணிவது போன்ற சொந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை தற்பொழுது பொதுமக்களிடம் நாங்கள் விதந்துரைக்கவில்லை. சுகாதார நெடுங்காலப் பராமரிப்பு அமைச்சு வகுத்த வழிமுறைகளின்படி நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும் சுகாதார பராமரிப்பாளர்களே அவற்றை இப்பொழுது பயன்படுத்துவார்கள். மேலதிக விபரங்களுக்கு நாடவும் WWW.health.gov.on.ca

**பின்வரும் பொதுசுகாதார செய்திகளைப் பரப்புவதில் உங்கள் ஒத்துழைப்பை நாங்கள் நாடுகிறோம்.**

• உங்கள் கைகளை சவர்க்காரம், வெந்நீர் கொண்டு அடிக்கடி முற்றுமுழுதாகக் கழுவவும் அல்லது மதுசாரம் கொண்டு தயாரித்த கிருமிபோக்கி எதனையும் பயன்படுத்தவும்.
• வாயையும் மூக்கையும் மூடி இருமவும் அல்லது தும்மவும்.
• உங்களிடம் மென்தாள் இல்லாவிட்டால் உங்கள் சட்டைக் கை அல்லது புயம் கொண்டு இருமவும் அல்லது தும்மவும்.
• நோய்வாய்ப்பட்டால், வீட்டிலேயே தங்கியிருக்கவும்.
• நீங்கள் அண்மையில் மெக்சிக்கோ சென்றுவந்தவர், அத்துடன் உங்களில் சளிக்காய்ச்சலின் அறிகுறிகள் தென்படுகின்றன என்றால், உங்கள் சுகாதார பராமரிப்பாளருடன் தொடர்புகொள்ளவும். உங்கள் பயண விபரத்தை அவரிடம் தெரிவிக்கவும்.

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

aladeen
tailoring services
PHONE: (647) 827-6543 WEB: www.aladeen.ca E-MAIL: info@aladeen.ca
சகலவிதமான தையல் வேலைகளும்
நீங்கள் விரும்பியபடி தைத்துக்கொடுக்கப்படும்.
திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

FOR SALE
MEDITATION CUSHION
BONE PILLOW
NECK PILLOW
PET BED/QUILT
PALM PROTECTOR FOR THE ELDERLY
CLOTHING PROTECTOR
WALKER BAG

CALL US TO INQUIRE ABOUT OTHER CARE PRODUCTS
Aladeen Tailoring Services, the professionals in tailoring and alteration. Conveniently located in Toronto at Don Mills & Sheppard, Aladeen is a full service tailoring and alteration business serving the Sri Lankan and Indian community in Toronto for over 10 years.
CALL RANI AT (647) 827-6543 OR (416) 321-2712

# ‘I.P.L கிரிக்கெட் திருவிழா’ விளையாட்டுத் தகவல்கள் 259

## வெளியேறியது கல்கத்தா டெல்லி அணிக்கு 7வது வெற்றி

ஜோகனஸ்பர்கில் நடந்த ஐ.பி.எல் கிரிக்கெட்டில் டெல்லி டேர் டெவில்ஸ் அணிக்கு எதிராக கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியதன் மூலம் அரைஇறுதி வாய்ப்பை முழுமையாக இழந்தது.

விரல் காயத்தால் அவதிப்பட்டு வரும் டெல்லி அணித்தலைவர் ஷேவாக் இந்த ஆட்டத்திலும் ஆடவில்லை. Toss வென்ற டெல்லி அணித்தலைவர் கவுதம் கம்பீர் முதலில் கல்கத்தா அணியை பேட் செய்ய பணித்தார். இதன்படி அணித்தலைவர் மெக்கல்லமும் முன்னாள் அணித்தலைவர் கங்குலியும் கல்கத்தாவின் இன்னிங்சை தொடங்கினார்கள்.

நெஹராவின் முதல் ஓவரின் 2வது பந்தை சிக்சருக்கு தூக்கிய மெக்கல்லம் அதற்கு அடுத்த பந்தில் நடுவர் சுரேஷ் சாஸ்திரியின் தவறான எல்.பி.டபிள்யூ முடிவுக்கு பலியானார். டி.வி ரீப்ளேயில் பந்தை ஸ்டம்பை விட்டு விலகி செல்வது தெரிந்தது. இதனால் ஏமாற்றத்துடன் மெக்கல்லம் பெவிலியன் திரும்பினார். அடுத்து இறங்கிய பிராட் ஹாட்ஜ் (0) அதே ஓவரில் கேட்ச் ஆனார். இதனால் அதிர்ச்சிக்குள்ளான கல்கத்தா அணி, வீழ்ச்சியில் இருந்து மீள கடுமையாக போராடியது. கங்குலி ஒரு பக்கம் போராட, மறுபுறம் மளமளவென விக்கெட்டுகள், சரிந்த வண்ணம் இருந்தன. இதன் பின்னர் இறுதி கட்டத்தில் அஜீத் அகர்கர் அணிக்கு கைகொடுத்தார். அகர்கரும் ஒரு ஓட்டத்தில் இருந்தபோது கங்குலியால் எளிதாக ரன்அவுட் ஆகி இருக்க வேண்டியது, தில்ஷனின் தவறினால் தப்பினார். கங்குலி 44 ஓட்டங்கள் (45 பந்து ஒரு பவுண்டரி, 2சிக்சர்) எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன்பிறகு அகர்கரின் அதிரடியால் கொல்கத்தா அணி 100 ஓட்டங்களை கடந்தது. 21 ஓட்டங்களில் இருந்த போது மீண்டும் ஒரு முறை கண்டத்தில் இருந்து தப்பித்த அகர்கர். இறுதியில் ஆட்டத்தின் கடைசி பந்தில் ஆட்டம் இழந்தார். அவர் 39 ஓட்டங்கள் (29 பந்து 3 பவுண்டரி, 2 சிக்சர்) விளாசினார். 20 ஓவர் முடிவில் கல்கத்தா அணி 8 விக்கெட்டுக்கு 123 ஓட்டங்களை சேர்த்தது. அந்த அணியில் 4 வீரர்கள் தவிர மற்ற யாரும் இரட்டை இலக்கை தொடவில்லை.

டெல்லி அணி தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா 3 விக்கெட்டுகளும், நெஹரா, திர்க் நேன்ஸ் தலா 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினார்கள்.
பின்னர் 124 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலபமான இலக்குடன் டெல்லி அணிக்கு அணித்தலைவர் கம்பீரும், டேவிட் வார்னரும் சிறப்பான தொடக்கம் ஏற்படுத்தி கொடுத்தனர். இதனால் டெல்லி அணி நெருக்கடியின்றி வெற்றி நோக்கி பயணித்தது. முதல் விக்கெட்டுக்கு 53 ஓட்டங்கள் சேர்த்த ஜோடியில் முதல் விக்கெட்டாக கம்பீர் (18 ஓட்டம், 24 பந்து, 3 பவுண்டரி) ஆட்டம் இழந்தார்.

இதை தொடர்ந்து வார்னர் (36 ஓட்டம், 23 பந்து, 5 பவுண்டரி, ஒரு சிக்சர்) தில்ஷன் (1 ஓட்டம்) ஆகியோர் இஷாந்த் ஷர்மாவின் ஒரே ஓவரில் வீழ்ந்தால் கொல்கத்தா வீரர்கள் சற்று நம்பிக்கையுடன் காணப்பட்டனர். ஆனால் 4வது விக்கெட்டுக்கு இணைந்த டிவில்லியர்சும். தினேஷ் கார்த்திக்கும் அவர்களின் நம்பிக்கையை தகர்ந்தெறிந்தனர். இந்த வெற்றி மூலம் டெல்லி டேர் டெவில்ஸ் அணி 9 ஆட்டங்களில் 7 வெற்றியுடன் 14 புள்ளிகள் பெற்று முதலிடம் வகிக்கிறது. ஆட்டநாயகனாக 4 ஓவர்கள் வீசி 14 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்டுகள் கைப்பற்றிய அமித் மிஷ்ரா தேர்வு செய்யப்பட்டார்.

### பெங்களூரை வென்றது மும்பை அணி

தென்ஆபிரிக்காவில் நடைபெற்று ஐ.பி.எல் இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் இன்று நடை-பெற்ற முதல் போட்டியில் பெங்களூர் அணியை 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது மும்பை அணி. பூவா - தலையா வென்று முதலில் களமிறங்கிய மும்பை அணி, ரஹானே டூமினி ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 157 ஓட்டங்களை எடுத்தது.

ஜெயசூர்யா 29 ஓட்டங்களும் ரஹானே 49 பந்துகளில் 62 ஓட்டங்களும், டூமினி 41 பந்துகளில் 59 ஓட்டங்களும் எடுத்தனர். சச்சின் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். 157 என்ற இலக்கை துறத்து களமிறங்கிய பெங்களூர் அணியின் துவக்க ஆட்டக்காரர்கள் எவரும் நிலைத்து நின்றாடவில்லை. காலிஸ் 12 ஓட்டங்களுக்கும், கோலி 20, உத்தப்பா 4, ரெய்லர் 16, திராவிட் 10 ஓட்டங்கள் என ஆட்டமிழந்தனர். மார்க் பௌச்சர் மட்டும் ஒரு முனையில் நின்றாடி 33 பந்துகளில் 48 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் பெங்களூர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 141 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இறுதியில் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக டூமினி தேர்வு செய்யப்பட்டார்.

### கில் எதிர்ப்பு எதிரொலி. ஐ.பி.எல் எஸ்.எம்.எஸ் ‘விளையாட்டு’ நிறுத்தம்

**புதுடில்லி மே 12:** ஒவ்வொரு பந்திலும் எத்தனை ஓட்டங்கள் கிடைக்கும் என்பதைக் கணிக்கும் எஸ். எம். எஸ் விளையாட்டை நிறுத்த ஐ.பி.எல் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டுள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுபாட்டு வாரியம். இந்த விளையாட்டுக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் எம். எஸ். கில் சமீபத்தில் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. சூதாட்டத்துக்கு இந்த எஸ்.எம்.எஸ் விளையாட்டு வழிவகை செய்கிறது என அவர் கூறியிருந்தார். இந்நிலையில் பிசிசிஐ மூத்த நிர்வாகி ராஜீவ் சுக்ல செவ்வாய்கிழமை தெரிவித்துள்ளதாவது. ‘ஒவ்வொரு பந்தையும் அதை எதிர்கொள்வதற்கு முன்னதாக எத்தனை ஓட்டங்களை அந்த வீரர் பெறுவார் என்பதைக் கணிக்கும் எஸ்.எம்.எஸ் விளையாட்டை ஐ.பி.எல் அறிமுகப்படுத்தியிருந்தது. இதற்கு பல்வேறு தரப்பிலிருந்து கண்டனம் எழுந்தது. மத்திய அமைச்சர் கில்லும் அதிருப்தி தெரிவித்திருந்தார். அதன் அடிப்படையில் உடனடியாக அந்த விளையாட்டை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காக யாரும் நெருக்கடி கொடுக்கவில்லை. புகாரும் அளிக்கவில்லை.’ எனத் தெரிவித்துள்ளார் சுக்ல்.

### அவுஸ்திரேலிய அணியில் சைமண்ட்ஸ் லீ

20 - 20 உலகக் கோப்பைக்கான அவுஸ்திரேலிய அணியில் ஆன்ட்ரூ சைமன்ட்ஸ், பிரெட் லீ ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த டிசம்பரில் தென்ஆபிரிக்காவில் நடைபெற்ற தொடரின் போது காயமடைந்த வேகப்பந்துவீச்சாளர் பிரெட்லீ அதன் பிறகு சர்வதேச ஆட்டங்களில் இதுவரை பங்கேற்கவில்லை. மோசமான நடத்தை காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்ட ஆன்ட்ரூ சைமண்ட்ஸ் அணியில் இடம்பெற்றுள்ளார். இளம் வீரர்கள் ஷேன் வாட்சன், டேவிட் ஹசி, டேவிட் வார்னர் ஆகியோரும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ரிக்கி பாண்டிங் அணித்தலைவராகவும், மைக்கேல் கிளார்க் துணை அணித்தலைவராகவும் தொடருகின்றனர்.

### பாகிஸ்தான் அணியில் அக்தர்

இங்கிலாந்தில் நடைபெற உள்ள 20 - 20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் சர்ச்சைக்குரிய வேகப்பந்துவீச்சாளர் ஷோயப் அக்தர் இடம்பிடித்துள்ளார். பந்துவீச்சு முறை கேள்விக்குறியாகி உள்ள சயீத் அஜ்மலும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். புதுமுகங்களான வேகப் பந்து வீச்சாளர் முகமது ஆமிர் மற்றும் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் ஷா, ஸப் ஹசன் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு தினத் தொடரில் விளையாடிய 13பேர் அணியில் மீண்டும் இடம்பெற்றுள்ளனர். தென்ஆபிரிக்காவில் 2007 இல் நடைபெற்ற முதல் 20 -20 உலகக் கோப்பை போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவிடம் பாகிஸ்தான் தோல்வியுற்றது.

### 20 - 20 உலகக் கோப்பை இலங்கை அணிக்கு சங்கக்கார அணித்தலைவர்

20 -20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணிக்கு குமார் சங்கக்கார அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளீதரன் துணை அணித்தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். பாகிஸ்தானுடனான தொடருக்கு பின், பேட்டிங்கில் கவனம் செலுத்துவதற்காக அணித்தலைவர் பதவியை ஜயவர்த்தனே ராஜினாமா செய்தார். எனினும், அணியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். புதுமுகங்களான ஆல்ரவுண்டர் இசுரு உதானா (21), பேட்ஸ்மேன் இன்டிகா சரம் (35) ஆகியோருடன் 2007 உலகக் கோப்பையில் விளையாடிய லசித் மலிங்காவும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மூத்தவீரர்களான சமிந்தவாஸ், தில்ஹாரா பெர்னாண்டோ ஆகியோர் இடம்பெறவில்லை. பிரிவு ‘சி’யில் அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகளுடன் இலங்கை உள்ளது. இதில் 2 அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும்.

**உலகக் கோப்பையை எந்த அணியும் வெல்லும் - இம்ரான்:** பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவரும் தற்போதைய அரசியல்வாதியுமான இம்ரான் கான் இருபதுக்கு 20 கிரிக்கெட் உலகக் கோப்பையை எந்த அணி வேண்டுமானாலும் வெல்லலாம் என்று கூறியுள்ளார்.

நான் இருபதுக்கு 20 கிரிக்கெட் பார்ப்பதில்லை. அதில் திறமைக்கு வேலையில்லை. அது வெறும் அதிஷ்டம் சார்ந்த ஒரு ஆட்டம். அதனால் தான் கூறுகிறேன் T20 உலகக் கோப்பை கிரிக்கெட்டில் யார் வேண்டுமானாலும் வெல்லலாம் என்று.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து பாகிஸ்தான் தனிமைப்படுத்தப்படுவதில் இந்தியாவின் பங்கு பற்றி குறிப்பிடும் இம்ரான் கான். ‘மும்பை தாக்குதலுக்கு பிறகு இலங்கை அணி கூட பாகிஸ்தான் சென்று விளையாடக்கூடாது என்று விரும்பியதாக நான் கேள்விப்பட்டேன். இதனால் அந்த சாத்தியக் கூறையும் நான் மறுப்பதற்கில்லை’ என்றார் இம்ரான். ஆனால் அவர் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய அதிகாரிகளையே இந்த விடயத்தில் கண்டித்து பேசினார். 2011 உலகக் கோப்பை போட்டிகளிலிருந்து தங்களை நீக்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிந்துள்ள போது விவாதத்தில் தங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துக் கூறியிருக்கவேண்டும். மேலும் மற்ற ஆசிய நாடுகளின் நம்பிக்கையையும் ஆதரவையும் திரட்டியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இதனைச் செய்யவில்லை என்று குற்றம்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானில் உலகக் கோப்பை நடத்தப்பட முடியாவிட்டால் 2011 உலகக் கோப்பை போட்டிகளையே வேறு நாட்டிற்கு மாற்றியிருக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் மேற்கொள்ளவில்லை என்று இம்ரான் கான் கூறியுள்ளார்.

### தரவரிசையில் முதலிடம் இழந்தார் சந்தர்பால்

ஐ.சி.சி வெளியிட்டுள்ள ரெஸ்ற் கிரிக்கெட் வீரர்கள் தரவரிசையில் முதலிடம் வகித்து வந்த மேற்கிந்திய ‘சுவர்’ ஷிவ் நாராயண சந்தர்பால் தற்போது 2வது இடத்திற்கு பின்னடைந்தார். பாகிஸ்தான் அணித் தலைவர் யூனுஸ் கான் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

லார்ட்சில் சமீபத்தில் 3 நாட்களில் முடிந்த இங்கிலாந்து மேற்கிந்திய அணிகளுக்கு இடையேயான முதல் ரெஸ்ற் போட்டியில் முதல் இன்னிங்சில் ஓட்டம் எதுவும் எடுக்காமலும், இரண்டாவது இன்னிங்ஸில் 4 ஓட்டங்களும் சந்தர்பால் ஆட்டமிழந்ததால் முதலிடத்தை இழக்க நேரிட்டது. தற்போது சந்தர்பால், இலங்கையின் சங்கக்காரா ஆகிய இருவரும் 2ஆம் இடத்தில் உள்ளனர். பந்து வீச்சு வீரர்கள் தரவரிசையில் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தொடர்ந்து முதலிடத்தையும் தென்ஆபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் இரண்டாம் இடத்தையும், மிட்செல் ஜான்சன் 3ஆம் இடத்தையும் தக்கவைத்துள்ளனர். இந்தியாவை பொறுத்த வரை பேட்டிங் தரவரிசையில் கம்பீர் 4ஆம் இடத்திலும் பந்து வீச்சில் ஹர்பஜன் 6ஆம் இடத்திலும் உள்ளனர்.

**அசத்தினார் சஃபீனா :** ரோமில் நடைபெறும் இத்தாலி ஓபன் மகளிர் ரெனிஸ் தொடர் அரையிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடம் வகிக்கும் ரஷ்ய வீராங்கனை தினாராச சஃபீனா, அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸை 6 - 7, 6 - 3, 6 - 4 என்ற கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். முதல் செட்டை தோற்ற சஃபீனா 2வது செட்டில் 0 - 2 என்று பின்னடைவு கண்டார். ஆனால் அதன் பிறகு ஆடிய அபாரமான ரெனிஸ் ஆட்டத்தினால் வீனஸை நிலை குலையச் செய்தார்.

மற்றொரு அரையிறுதியில் ரஷ்ய வீராங்கனை குஸ்ன்டெசோவா 6 - 2, 6 - 4, என்ற நேர் செட்களில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்காவை வீழ்த்தி இறுதியில் சக வீராங்கனை சஃபீனாவை சந்திக்கிறார். வீனஸ் வில்லியம்ஸ் முதல் செட்டில் சஃபீனாவின் சில சக்தி வாய்ந்த ஃபோர்ஹேண்ட் ஷாட்களா எதிர்கொண்டார். ஆனால் சளைக்காமல் விளையாடி ஆட்டத்தை சமன் முடிவிற்கு நகர்த்தினர். அதில் வீனஸ் 7 - 3 என்று வென்று முதல் செட்டைக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டிலும் 2 - 0 என்று வீனஸ் முன்னிலை பெற்றார். ஆனால் அடுத்த 7 சர்வ கேம்களில் 6 சர்வகேம்களை வென்றார். சஃபீனா இதனால் வீனஸ் அதிர்ச்சியடைந்தார்.

**எஸ். கணேஷ்**




## S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்

மக்கள் சேவை சதாசிவ சேவை

**மூத்தோருக்கான சேவைகள்**

- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

**சதாசிவா - 416.454.2810**
**ASATHN@hotmail.com**

**மற்றைய சேவைகள்**

> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

**இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்**

# வீடு வாங்குவதற்கு தகுந்த நேரமா?

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 298**

இன்று இருக்கும் தொழில் நாளை இருக்குமா? என்ற அங்கலாய்ப்பில் பலரின் காலம் நகருகின்றது. கடந்த செப்ரெம்பரில் ஆரம்பித்த நிலைமை இதுவரை தொடர் கதையாகவே நகருகின்றது. இந்த நிலைமையால் கனடிய, அமெரிக்க மற்றும் உலக நாடுகளின் மத்திய வங்கிகள் வங்கியின் வட்டிவீதத்தை குறைத்து கொண்டே வந்துள்ளன. கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 0.25% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கனடிய சரித்திரத்தில், இதுவே ஆகக்குறைந்த வட்டிவீதமாகும். இதனை விடவும் குறையுமா? எது எப்படியிருப்பினும் இந்த வட்டிவீதம் மிகக்குறைவானதே. இப்பொழுது ஐந்து வருடத்திற்குரிய மாறாத (Closed) வட்டிவீதம் 3.60% ஆகும். (TD Canada trust May 06.09) ஆனால் இன்றும் கவலைக்குரிய விடயம் கனடிய மக்கள் வேலை இழந்து வருகின்றார்கள். தொழில்புரியாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்தே செல்கின்றது.



ஆனால், 1996ஆம் ஆண்டிற்கு பிறகு ஆஸ்தியின் விலை ஏறத்தொடங்கியது. 2009ஆம் ஆண்டே முதல் தடவையாக சராசரி விலை குறையக்கூடிய நிலை ஏற்படப்போகின்றது. இருந்தபோதிலும், அதீத வட்டிவீத இறக்கத்தாலும் 35 வருடத்திற்குரிய அடமானக்கடனை திருப்பி கொடுக்கும் (Amortization Period) பெறப்படும். அடமானக்கடனிற்குரிய மாதாந்த கொடுப்பனவு மிகக்குறைந்துள்ளது. உதாரணமாக இவ்வாறு இருப்பதால் $1200 இற்கு மாதாந்த வாடகை கொடுப்பவர்கள் குறைந்தது 5% முதலீட்டுடன் ஒரு அடுக்குமாடிக் கட்டிடத்தில் ஒரு அலகு வாங்குவதால் (1Bedroom Condo. Unit) அல்லது $200,000 உட்பட்ட விலையுள்ள வீடு வாங்குவதால், அண்ணளவாக ஒரே அளவான மாதாந்த கொடுப்பனவே செய்ய வேண்டிஇருக்கும். வாங்குவதால் $200 மேலதிகமாக கொடுப்பனவு செய்தாலும் சொந்தமாக மனை ஒன்று வாங்குவதால் அடுத்து 5 வருடத்திற்குரிய மாதாந்த கொடுப்பனவில் பெரிதான மாற்றம் ஏற்படாது. எனவே இலகுவாக திட்டமிடலாம்.

எதிர்வரும் 5 வருடத்தில் வீட்டின் விலையில் எவ்வாறான மாற்றம் நிகழும் எனக் கூறுவது இலகுவல்ல. எனினும் விலை சீராக அல்லது குறைந்தாலும் கூட கடன்பட்ட தொகையில் ஒரு பகுதி செலுத்தப்பட்டு இருக்கும். இதனால் நன்மையே கிடைக்கும்.

1989இல் வீடு வாங்குபவர்களில் பலரின் நிலைமையை அறிந்திருப்பீர்கள். 1989 இற்கு பிறகு விலை இறக்கம் ஏற்பட்டது. இதனால் 89இல் வாங்கியவர்கள் தமது வாங்கிய விலையை அடைய ஆகக்குறைந்தது 13 வருடங்கள் பொறுத்திருக்க வேண்டியிருந்தது.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

ஸ்காபரோ, மிசிசாக 2 இடங்களில், **140**இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969** /145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

## House for Sale

- *Midland & St. Clair*
- *2119 sq.ft.* • *Monarch Built*
- *4 bedrooms + 3 washrooms*
- *Hardwood floor & Broadloom + Ceramic floor*
- *Five (5) Appliances + Leed Complex (energy savings building)* • *Quick sale* • *Immediate closing* • *$359,900*

**BRAND NEW**

*Freehold end unit (Like Semi Detached)*

Nantha Aiyadurai

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# கம்பரின் நாடகக் கவிதைகள்

## முன்னுரை

இராமாயணம் ஓர் ஆரியர் காப்பியம். வால்மீகியாரால் முதன்முதலாகப் பாடப்பட்டது. வால்மீகியார் மகா புலவர். முழுவதும் உணர்ந்த முனிவர். கிரேக்கத்துக்கு கோமரின் ஒடிசி போல, பின்லாந்துக்கு எலியாஸ் லொண்றொத் (Elias Lonnrot) அவர்களால் தொகுக்கப்பெற்ற நாடோடிக் காப்பியமான கலேவலா போல பாரதத்துக்கு வால்மிகியாரின் இராமாயணம் புகழைத் தேடிக்கொண்டது. இராமர் கடல் கடந்து இலங்கைக்கு மட்டுஞ் செல்லவில்லை. வேறு பல நாடுகளுக்கும் பயணஞ் செய்யலானார்.

அத்தகைய புகழ்க் காப்பியத்தைத் தமிழிலே சொல்லத் துணிந்த கம்பரும் கருதரிய கல்விக் கடல், ஆரியத்தின் பரப்பையும் ஆழத்தையும் நன்கு அறிந்த முகில், முகில்போலப் பொழியும் புலவர். கற்பனையில் அவருக்கு இணையானவரைக் காண்பதரிது. 'கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்', 'கவிச்சக்கரவர்த்தி கம்பர்' போன்றவை அவரது புலமைக்குக் கொடிபிடிக்கும் தொடர்களாக இன்றும் வானளாவி நிற்கின்றன.

## தமிழர் காப்பியம்

அத்தகைய மாபுலவர் ஆரிய காப்பியத்தை அப்படியே எடுத்துக்கொள்ளாது தமிழ் மக்களுக்கு ஏற்றவகையிற் பல மாற்றங்களைச் செய்து இராமாயணத்தைத் தமிழர் காப்பியமாகவே மாற்றிவிடுகிறார். சுருக்கமாகச் சொன்னால் இராமனைத் தமிழனாகவே படைத்துவிடுகிறார். திருமாலின் ஏழாவது அவதாரத்தைத் தமிழ்நாட்டில் உலவவிடுகிறார். ஆம். அயோத்தி வருணனையில் அந்த அளவுக்குத் தமிழ்நாட்டுவளம் கொலுவிருக்கின்றது.

தமிழ்நாடு, தமிழ்மக்கள் பண்பாடு, அறவொழுக்கம் போன்றவற்றை எடுத்துக்கூற இராமர் கதையை முழுமையாகப் பயன்படுத்தும் கம்பர், தமிழர் கலைகளுக்கும் ஆங்காங்கு முதன்மை அளிப்பதைக் காணலாம். அவற்றுள் நாடக இயல்புகளே காப்பியம் முழுவதும் விஞ்சிநிற்கின்றன. அதனால் கம்பராமாயணத்துக்கு நாடகக் காப்பியம் என்றே அறிஞர் முத்திரை குத்தியுள்ளனர்.

## கட்டுரையின் நோக்கம்

கம்பர் பெரிய நடிகர். நாடகக் கலையின் நுணுக்கங்களை நன்கு அறிந்த கலைஞர். பல இடங்களில் அந்த நுணுக்கங்களை எல்லாம் விவரித்திருக்கின்றார். அவற்றிற் சிலவற்றைத் தொட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கம்பரும் நாடக மரபும்

அயோத்தி நகர மாளிகைகளின் அமைப்பையும் எழிலையும் விளக்குகையில்,

பாடகக் காலடி பதுமத்து ஒப்பன
சேடரைத் தழீஇயின செய்ய வாயின
நாடகத் தொழிலின நடுவு துய்யன
ஆடகத் தோற்றத்த அளவி லாதன
(பால காண்டம்: நகரப் படலம் 30)

என்றும் மக்களின் ஆடல் பாடல்களைக் கூறுகையில்,

அரங்கிடை மடந்தையர் ஆடுவார் அவர்
கருங்கடைக் கண் அயில் காமர் நெஞ்சினை
உருங்குவ மற்றவர் உயிர்கள் அன்னவர்
மருங்குபோல் தேய்வன வளர்வ தாசையே
(பா.கா: நகரப் படலம் 45)

என்றும் வருணைகளில் நாடகத்தை முன்னிலைப்படுத்துகின்றார். இன்னும் அயோத்தி மக்கள் பொழுதுபோக்கும் முறையை விளம்புகையில்,

ஊடவும் கூடவும் உயிரின் இன்னிசை
பாடவும் விறலியர் பாடல் கேட்கவும்
ஆடவும் அகன்புனல் ஆடி அம்மலர்
சூடவும் பொழுதுபோம் சிலர்க்கத் தொல்நகர்
(பா.கா. நகரப் படலம் 65)

என்று கூறி எமது கூத்து முன்னோடிகளான பாணன், கூத்தன், விறலி முதலியோரை நினைவுபடுத்துகின்றார். இவை எல்லாம் தமிழரது நாடக மரபில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் நாட்டத்தையும் காட்டுகின்றன.

மிதிலை நகரம் பல ஆடல் அரங்குகளைக் கொண்டிருந்தது. அவற்றில் நங்கையர் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். ஒரு பெண்ணின் நடனத்தை

கைவழி நயனம் செல்ல கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் ணிடையா ராடும் ஆடக அரங்கு
(மிதிலைக் காட்சிப் படலம் 8)

என்று மிக நுட்பமாகப் படம் பிடிக்கின்றார் கம்பர்.

**தொடரும்**



**கவிஞர் வி. கந்தவனம்**

# வீடு வாங்குவதற்குரிய...

**07ஆம் பக்கத்தொடர்ச்சி**

இது உண்மை. ஆயினும் அப்போதைய நிலைமையிலும் இன்றைய நிலைமையிலும் உள்ள வட்டிவீதம், மிக வித்தியாசமாகக் காணப்படுகின்றது.



வாடகைக்கு கொடுக்கும் பணம், வீணாகவே செலவழிந்து விடும். ஆனால் சொந்த வீட்டில் செலுத்தும் பணத்தில் ஒருபகுதியாவது திருப்பி வரக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் வீடு வாங்குவது வாகனம் வாங்குவது போல் அல்ல. வாகனம் இல்லாமலும் வாழலாம். ஆனால் இருக்கும் இடம் இல்லாமல் இருக்க முடியாது. அத்துடன் நீண்டகாலத்தில் வீடு ஒரு முதலீடாகவும் கொள்ளலாம். நிரந்தரமாக இருக்ககூடிய வசதியுமுண்டு.

கீழுள்ள உதாரணத்தை பார்க்கவும். 3 அறைகளும் 2 குளியல் அறைகளும் கொண்ட ஒரு வீட்டை கவனிப்போம்.

வீட்டின் விலை $215.000, 5%முதலீடு, 5 வருட வட்டிவீதம் 3.60%, 2008 ஆண்டிற்குரிய வரி $1850. அத்துடன் வீட்டில் பாவிக்கும் (Water, Hydro & Gas) தேவைக்குரிய மாதாந்த செலவு $250 அத்துடன் காப்புறுதி $40.

மாதாந்த அடமானக்கடன் $880
சோலைவரி = $155
வீட்டு பாவனைக்குரிய செலவு = $250
காப்புறுதி = $40
மொத்த மாதாந்த கொடுப்பனவு = $1325

### குறிப்பு

இன்றைய வீட்டுச்சந்தையில் 3 அறை வீடு வாடகைக்கு $1200 (அல்லது மேல்) மற்றும் மாதாந்த பாவனைக்குரிய செலவுகள் மேலதிகம்.

அல்லது 3 அறை கொண்ட அப்பாட்மென்ட் (Apartment) அல்லது கொண்டோ (Condo.) அறை வாடகைக்கு சராசரி $1250 , $1400 வரை (இடத்திற்கு ஏற்ப மாறும்)

மேலுள்ள உதாரணத்தைப் பார்க்கும் போது வாடகைக்கு இருப்பதா அல்லது சொந்தமாக வாங்குவதா சிறந்தது என நீங்களே முடிவு செய்யுங்கள்.

***Home ownership in Canada***

Alberta 73%
Ontario 71%

***Housing Market Indicatory***

| | ***April 2008*** | ***April 2009*** |
|---|---|---|
| விற்ற வீடுகள் | 8762 | 8107 |
| Active Listing | 24,530 | 23,515 |
| சராசரி விலை | $398,687 | $385,641 |


**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# இரு இடங்களில்

## துரித பணமாற்றுச் சேவை

# பொன்விழா கண்ட ஸ்தாபனம்

## இதில் 18 வருடங்கள் கனடாவில்

## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?



தமிழ் மக்கள் இதயங்களில்
பணமாற்றுச் சேவையில்
இடம் பிடித்தவர்கள்

# மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
**SCARBOROUGH, ON. M1J 2H6**
தொலைபேசி எண்: **416-267-8221**

**3351 MARKHAM ROAD, SUITE #109**
**(Markham & Steeles)**
**SCARBOROUGH, ON. M1X 0A6**
தொலைபேசி எண்: **416-321-8221**

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# ‘உறுப்புகளின் தன்மைகளும் அவற்றில் ஏற்படும் வியாதிகளும்’

## இருதயம் (Heart)

## ‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்’

இதன் அமைப்பும் செயல்திறனும் பாதிப்பினால் ஏற்படும் வியாதிகளும் (சில வைத்தியநூல்களின் துணையுடன் இதனை எழுதுகின்றேன்)

இருதயத்தை ஓரளவு அறிவதினால் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும். இருதயமானது நமது உடம்புக்கு முக்கிய உறுப்பாகும். இந்த இருதயமானது

வலது சோணையறை (Right Atrium)
இடது சோணையறை (Left Atrium)
வலது இதயவறை (Right Ventricle)
இடது இதயவறை (Left Ventricle)

எனப் பாகம் கொண்டது. மார்பு எலும்புக் கூட்டினால் பாதுகாக்கப்படுகின்றது. மேலும் இதனகத்தே


தொகுப்புபெருநாடி (Aorta)
சுவாசப்பெருநாடி (Pall monary Artery)
முற்பக்கப் பெருநாளம் (Superior vena Cava)
பிற்பக்கப் பெருநாளம் (Inferior Vena Cava)
முடியுருநாடி (Coronary artery)
என்பனவற்றுடன் இரத்தக்குழாய் பல்மிளரி வால்வு (Pulmonary Valve) மகாதமணிவால்வு (Porta Valve) என்பனவும் அமைந்துள்ளன.

இடது சோணையறை (Left Atrium) பிராணவாயு நிறைந்த சுத்தமான இரத்தத்தைக் கொண்டுள்ளது. வலது சோணையறை (Right Atrium) பிராணவாயு அற்ற அசுத்த இரத்தத்தைக் கொண்டது. இவை நாடி மூலம் நல்ல இரத்தமும், நாளத்தின் மூலம் அசுத்த இரத்தமும் ஓடிக்கொண்டு இருக்கின்றன.

நமது உடம்பின் அசைவுகள் யாவற்றுக்கும் மூளையில் இருந்து உத்தரவு கிடைக்கவேண்டும். ஆனால் இருதயத்தின் தசை நார்கள் நித்தம் சுருங்கி விரிவதற்கு மூளையின் உத்தரவு இன்றி நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. வலது பக்கச் சோணையறையானது வருகின்ற இரத்தத்தைப் பெற்றுப் பாதுகாத்து சுத்தப்படுத்தி உரிய இடத்திற்கு நாடி மூலம் அனுப்பிவைக்கின்றது. சுத்த இரத்தம் நுரையீரலில் (Lung) இருந்து இடது சோணையறையை அடைகின்றது. பின்பு சுத்தமான இரத்தம் நாடிக்குழாய் மூலம் உடல்பாகங்களுக்குச் செல்லுகின்றன. இருதயத்தில் உள்ள வால்வு (Valve) ஆனது இரத்தம் ஒரே பாதை வழியாகச் செல்லவும், வந்த இரத்தம் மீண்டும் வந்த பாதைக்குத் திரும்பாவண்ணம் பாதுகாத்து வருகின்றது.

இருதயமானது நாம் பிறப்பதற்கு முன்பே தனது வேலையைத் தொடங்கி இறக்கும் வரை செயலாற்றும் தன்மை உடையது. இருதயத்தசைகள் சுருங்கி விரியும் போது இரத்தக்குழாய்கள் வழியாக இரத்தம் சென்று கொண்டேயிருக்கும் அவ்வேளை ஒரு அதிர்வான துடிப்பு ஏற்படும். இதனை நமது கையில் உள்ள மணிக்கட்டுப் பகுதியில் பிடித்து விரல்களை வைத்துப்பார்த்தால் துடிக்கும் தன்மை நன்கு புலனாகும். இத்துடிப்பு ஆனது ஒரு நிமிடத்திற்கு 72 தரம் அதிர்வதைக் காணமுடியும். இப்படியான அதிர்வு சிலருக்கு கூடிக்குறைந்து காணப்படும். இத்தன்மை இருதய தாக்கத்தினால் ஏற்படும் நோயின் இயல்பாக இருக்கும். மேலும் நமது இரத்தத்தில் செஞ்சீவணு (R.B.C) வெண்சீவணு (W.B.C) என்பன, இரண்டறக்கலந்து எம்மைக் காப்பாற்றி வருகின்றது. மேலும் இருதயத்தில் ஏற்படும் வியாதிகள் சிலவற்றைப் பார்ப்போம்.

மாரடைப்பு (Heart Attack)
கீழ்வாதம் (Kheumatic Fever)
இருதயத் தசை இறுக்கம் (Cardiospasm)
இருதயத் துடிப்பு நிற்றல் (Cardiac Arrest)
இருதயத் தசை அழற்சி (Myocarditis)
இருதய வீக்கம் (Hypertrophy of the Heart)
அதிக நெஞ்சுத்துடிப்பு (Palpitation)
மெதுவான நாடித்துடிப்பு (Slow Pulse)
மார்புவலி (Chest Pain)
ஒழுங்கற்ற நாடிதுடிப்பு (Irregular Pulse)




என்பனவாகும். எனவே இந்நிலையான தன்மைகள் ஏற்பட பல காரணங்கள் உண்டு. இதற்கு விசேட ஆய்வுகள் செய்த வைத்தியர்களும் தற்காலத்தில் உள்ளனர். பொதுவைத்தியர்களும் சிறந்த ஆய்வுகள் மூலம் கண்டுகொள்வார்கள். எதற்கும் வைத்தியர்களை நாடி தகுந்த வைத்தியத்தையும், ஆலோசனைகளையும் தகுந்த மருந்துகளையும் பெற்றுக்கொள்வது முக்கியமாகும்.

விஞ்ஞானம் விருத்தியடையாத முற்காலத்தில் இப்படியான வியாதிநிலைகளை நன்கு பரீட்சித்து நிதானித்து தகுந்த வைத்தியம் செய்து குணப்படுத்திய ஆங்கில வைத்தியர்கள், சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் போன்றோர் இருந்ததை நாம் நன்கு அறிவோம். தற்பொழுதும் இந்நிலை மாறவில்லை.

சித்த ஆயுர்வேத வைத்தியமானது அதாவது மூலிகைவர்க்கத்தினால் ஆன மருந்து வகைகளைக் கொடுத்து உடம்பில் எதுவித தாக்கமும் ஏற்படாமல் வியாதிகளைக் குணப்படுத்தி வந்தவர்களையும், வருபவர்களை யும் தற்காலத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது. எதற்கும் நோயின் நிதானம் முக்கிய இடத்தை வகிக்கும் மாற்றப்படும் வியாதிகள் மீண்டும் பெரும்பாலும் வருவதில்லை. இது மூலிகை வர்க்கத்தின் விசேட தன்மையாகும்.

சிலவேளையில் எம்மில் சிலருக்கு நெஞ்செரிவு ஏற்படுவதுண்டு. இந்நிலை தொடர்ந்தும் இருக்கலாம். அல்லது இடையிடையே வரலாம். இந்நிலை ஜீரணசக்தி குறைவதினாலும், இருதயத்தின் தாக்கத்தினாலும் ஏற்படலாம். நாம் சாப்பிடும் உணவுகள் வயதிற்கும், உடல் நிலைக்கும், காலநிலைக்கும், இடத்திற்கும் ஏற்பக் கையாளவேண்டும். அதிக எண்ணெய், உணவுப்பொருட்கள், உறைப்புவகைபொருட்கள், கொழுப்புப்பதார்த்தங்கள் மிக மிஞ்சிப் பாவிப்பதனால் அஜீரணம் ஏற்பட்டு நெஞ்செரிவு ஏற்படலாம்.

அடுத்து இருதயத்தாக்கத்தினாலும் நெஞ்செரிவு ஏற்படலாம். எனவே நோய் நிர்ணயம் அதாவது நிதானம் (Diagnosis) முக்கியம். கைநாடி மூலமும் குணம் குறி கண்டும் இவ்வியாதியை அறியலாம். அல்லது இருதயக்கோளாறு நிலை கண்டு அறியவேண்டுமேயானால் உரிய வைத்தியர்களிடம் சென்றால் அவர்கள் நமது இருதயம் வேலை செய்யும் தன்மையை விளக்கும் கருவிபற்றிய விளக்கத்தை எடுத்துக்கூறுவார்கள்.

நாம் ஓய்வாக இருக்கும் போது இ.சி.ஜி (E.C.G) , (Xray) மூலம் அறிவார்கள். வேலை செய்யும் போது இருதயம் எப்படி இருக்கின்றது என்பதை நகரும் பலகைமீது நடக்கவிட்டோ அல்லது நகராத சைக்கிளில் ஓடச் சொல்லிப் பார்த்துக் கொள்வார்கள். எனவே வேலை செய்கிற போதும் வேலை செய்யாதபோதும் இருதய ஓட்டத்தை கணக்கிட்டு வியாதியைக் கண்டு கொள்வர். மற்றும் பித்தப்பையில் கற்கள் இருந்தாலும் நெஞ்செரிவு ஏற்படுவதுண்டு. எனவே எதற்கும் வைத்தியர்களின் ஆய்வு, ஆலோசனைகள் முக்கியமாகும். சிலருக்கு இருதயத்தில் சத்திர சிகிச்சை (அறுவை) செய்யக்கூடிய நிலையும் வரலாம்.

சிலர் குண்டர்களாக இருப்பவர்களுக்குப் பலவியாதிகள் வர ஏதுவாக இருக்கும். அதிக கொழுப்புச்சத்து இருந்தால் அல்லது சலரோகம் (அல்லது மதுமேகம் அல்லது சக்கரை வியாதி) நிலை இருந்தாலும் இரத்தக் கொதிப்பு வியாதி வருவதற்கும் வாய்ப்புண்டு. எனவே இரத்தக் குழாய்களில் கொழுப்பு படிந்து உறைந்து அடைப்பு ஏற்படும்போது இருதயநோய் ஏற்படும். இவற்றை நன்கு அறிந்து கொள்ள தங்கள் வைத்தியர்களை நாடிக் கொள்ளவேண்டும்.

இருதயமும், மனமும் ஒன்றாக இல்லாவிட்டாலும் மனதில் எழுகின்ற வீரிய உணர்ச்சியால் இருதயத்தின் வேலை பாதிப்படைய இடமுண்டு. தாங்க முடியாத அளவுகடந்த உணர்ச்சி யினாலும் இருதயத்தின் வேலை நின்றுவிடும் தன்மையும் ஏற்படலாம்.

மேலும் நம்மவர் சிலருக்கு மார்புவலி ஏற்படுவதை நன்கு அறிவோம். இந்த வலியானது இருதயத்திற்கு தேவையான இரத்தம் வேண்டியளவு கிடைக்காவிட்டால் ஏற்படுவதாகும். இதற்கு காரணத்தை எடுத்துக் கொண்டால் இருதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லுகின்ற இரத்த நாடிக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதினால் இருதயத்திற்கு வேண்டிய பிராணவாயு கிடைப்பது தடைப்படும். இருதயத்தின் தசையில் உள்ள அணுக்கள் இறந்து விடும் நிலை ஏற்படும். எனவே இந்நிலை ஏற்படுவோர் கூடிய விரைவில் தங்கள் வைத்தியர்களிடம் சென்று நன்கு பரீட்சித்துக் கொள்ள வேண்டும். இதற்கு தகுந்த வைத்தியம் செய்து குணப்படுத்த முடியும். இலகுவான சத்திரசிகிச்சைமூலம் சுகம் கண்டுவருபவர்களையும் நாம் காணுகின்றோம்.

மது அருந்தும் சிலருக்கு இருதயத்தில் நோய் வருவதுண்டு. இதனால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். உடம்பின் நிறையும் கூடிக் காணப்படும். இப்படியான நிலை இருதயநோயை அதிகரிக்க வாய்ப்புண்டு. ஆனால் ஓரளவு மதுவைப் பாவிப்பதினால் கொழுப்புத்தன்மையை அழிக்கும் எனவும் கூறப்படுகின்றது. எனவே குடிக்கும் மதுவில் ஏதாவது பழரசத்திரவங்களைக் கலந்து குடிப்பதினால் தாக்கம் அதிகம் ஏற்படாது. நமது இரத்தத்தில் குறைந்த கொழுப்புச்சத்து, உயர்ந்த கொழுப்புச்சத்து என்றநிலை உண்டு. எனவே மது உயர்ந்த கொழுப்புச்சத்தை அதிகப்படுத்தும்.

இருதயநோய்வலி ஏற்பட்டவர்கள் படுக்கையில் எப்படிப்படுத்தாலும் இருதயத்திற்கு கெடுதியில்லை. சிலர் குப்பறப்படுப்பார்கள். சிலர் சரிந்தவாறு தலையணிவைத்துப்படுப்பார்கள். இதனால் எதுவித தாக்கமும் ஏற்படாது.

கொலஸ்ரல் என்பது புரதச்சத்தும், கொழுப்புச்சத்தும் சேர்ந்த ஒரு கலப்பான பொருளாகும். இது இரத்தத்திலும், அணுக் களிலும் காணப்படுகின்றன. இதனை ஆங்கிலத்தில் Lipo Protein எனக் கூறப்படுகின்றது. இதன் அடர்த்தி கூடிக் குறைந்து காணப்படும். கூடிய அடர்த்தியினால் தீங்கு இல்லை. ஆனால் Lipo Protein இல் குறைந்த அடர்த்தியுள்ள Low density Lip Protein தீமையை ஏற்படுத்தக்கூடியது. இது இரத்தக்குழாய்களில் கொழுப்பு உட்பகுதியில் படிந்து குழாயின் அளவு குறைந்து விடுகின்றன. இதனால் முதன்மை பெற்ற மூளைப்பகுதியும், இருதயமும் தாக்கப்பட ஏதுவாக இருக்கும். எனவே தகுந்த உணவுவகைகளை அதாவது கொழுப்புச்சத்து குறைந்த உணவுகளை கையாள வேண்டும். அத்துடன் தகுந்த வைத்தியர்களை நாடி சிகிச்சை பெறுவதுடன் ஆலோசனையுடன் அறிவாற்றலையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மேலும் இருதயத்தில் காணப்படுகின்ற இணைப்பின் தொடர்புகள் துண்டித்துப் போனால் இருதய அடைப்பு (Heart Block) ஏற்படும். இருதயத்தின் தன்னகத்தே அமைந்துள்ள தசைநார்கள் நிமிடத்திற்கு குறைந்த அளவிற்கு துடிப்பு நிகழ்வு வேலை மந்தமாகிவிடும்.

இருதயத்தில் உள்ள வால்வுகள் சிலருக்கு பிறக்கும்போதே குறைபாடு காணப்படும். மற்றும் கீழ்வாதம், (Rheumatic Fever), விபத்து, முதுமை போன்றவற்றாலும் இருதய வால்வுகள் செயல் இழந்து பாதிக்கப்படும். இதனால் இரத்தோட்டம் குறைந்து காணப்படும். இந்நிலையை ஆங்கிலத்தில் Stenosis என அழைப்பர். சில சந்தர்ப்பங்களில் சரியாக வால்வு மூட முடியாவிட்டால் இரத்தக்கசிவு ஏற்பட்டு இரத்தம் செல்லவேண்டிய பாதையினால் செல்லாது பின்நோக்கிவரும். இதனால் பெரும்பாலும் இருதய வேலையை அதிகரித்து இருதயத்தில் தாக்கம் (Heart Failure) ஏற்படுத்தும். எனவே நிலைகண்டு வைத்தியர்களிடம் சென்று தகுந்த ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளவும்.

நம்மில் பெரும்பாலும் முதியவர்கள் வேகமாக நடந்தால் அல்லது வீடுகளில் படிகளில் ஏறி இறங்கும் போது எம்மை அறியாமல் மூச்சுக் கூடி இளைப்பு ஏற்படுவதை அறிவோம். நெஞ்சுப்பகுதியில் கூடிய படபடப்பு எம்மை அறியாமல் ஏற்படுவதையும் காணுகின்றோம். இதற்கு நாம் பயப்படத் தேவையில்லை. ஓரளவு ஓய்வு எடுத்தால் யாவும் நிவிர்த்தியாகும். இந்நிலை தவிர்ந்து சாதாரண நிலையில் நாம் இருக்கும் போது கூடிய படபடப்பு இழைப்பு இருந்தால் உடன் வைத்தியர்களை நாடிச் சிகிச்சை செய்ய வேண்டும். இதனைத் தெரிந்து கொள்ள ஆங்கில முறைப்படி ஒரு கருவியும் உண்டு. அதன் தன்மைகளைத் தங்கள் வைத்தியர் கூறுவார். கேட்டு அறிந்து கொள்ளலாம். இது இலகுவான முறையாகும். சில குழந்தைகளுக்கு இருதய நோய் பரம்பரையாக வருவதுண்டு. இருதய வால்வு சரியாக அமையாமல் இருந்தாலும் இருதயத்தில்


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013




தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# ‘உறுப்புகளின் தன்மைகளும்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி



மாற்றநிலை ஏற்படக்கூடும்.

நமது இருதயத்தில் உள்ள தொகுதிப் பெருநாடி (Aorja) உடலின் முக்கிய இரத்தக்குழாயில் இருந்து இருதயதிற்கு வெளியே இரத்தத்தை நாடிக்குழாய் எடுத்துச் செல்லுகின்றது. இதில் கொழுப்பு படிந்து இரத்தோட்டம் தடைப்படுகின்றது. இதனால் நாம் நமது உடலில் கொழுப்புத்தன்மை கூடிக்கொள்ளாமல் பாதுகாக்க கொழுப்புச்சத்து குறைந்த நார்ச்சத்து உணவுகள், தேகப்பயிற்சி, நடை என்பன முக்கியமாகும். மற்றும் வைத்தியர்களின் ஆலோசனைகளும் தகுந்த மருந்துவகைகளையும் கையாளவேண்டும்.

உணர்வாலும் உடலாலும் ஏற்படுகின்ற கூடிய அழுத்தத்தினால் மார்புப் பகுதிக்குத் தாக்கம் ஏற்படுகின்றது. இருதயத்தில் அமைந்துள்ள தசைகளுக்குத் தேவையான அளவான பிராணவாயு கிடைக்காவிட்டாலும், இரத்தக்குழாய்களில் கொழுப்புப்படிந்து அடைப்பு ஏற்படுவதினாலும், தேவையான இரத்தம் இருதயத்திற்கு கிடைக்காமல் அன்ஜீனா (Angina) என்ற இரத்தக்குழாய் வியாதி ஏற்படும்.

எமது உடம்பில் 5 லீற்றர் இரத்தம் இருக்கவேண்டும். நிமிடத்திற்கு 1மு றை, 5 லீற்றர் இரத்தையும் உடலுக்குள் பல பகுதிகளுக்கும் செலுத்துகின்றது. சிலருக்குச் சொற்பவயதில் முழங்கை மணிக்கட்டு, முழங்கால், கணுக்கால் மூட்டுக்களில் வலி வீக்கம் காணப்பட்டால் கவனிக்காமல் இருந்து விடாதீர்கள். இதனால் இருதயத்தில் உள்ள வால்வுகள் பாதிக்கப்படும் மைட்ரல் வால்வு சிறிதாகச் சுருங்கி வரும் நிலை ஏற்படும். அடுத்தடுத்துச் சுரம் ஏற்படும் போதும் சுருங்கும். இதனால் போதியளவு திறக்கவேண்டிய வால்வு சிறிதாகத் தான் திறக்கம். இதனால் வேண்டிய இரத்தம் கிடைக்காமல் இருதயம் இயங்கமுடியாமல் போய்விடும். வயது கூடிவரும்போது சிலவேளையில் கை, கால், வீக்கம் ஏற்பட்டு நடக்க முடியாத நிலையும் ஏற்படும். இது பெரும்பாலும் சிறுவயதில் கீழ்வாதக்காய்சல் (Rheumatic Fever) ஏற்பட்டிந்தால் ஏற்படவாய்ப்புண்டு. எனவே ஆரம்பத்தில் தகுந்த வைத்தியம் செய்து குணமாக்க வேண்டும். நாளடைவில் மையிற்றல் வால் குறைபாடு இருந்தால் சத்திரசிகிச்சை செய்யக்கூடிய நிலையும்வரலாம். இப்படி செய்வதினால் சுகம் பெறமுடியும் எனக் கூறப்படுகின்றது. எனவே எல்லாவியாதிக்கும் எல்லாவைத்தியமும் சரிவரும் எனக் கூறமுடியாது. உரிய வைத்தியரை நாடிச் செல்வது மிக நன்று.

சிலருக்கு இருதய வியாதியில் (பைபாஸ்) அறுவைச்சிகிச்சை செய்கிறார்கள். செய்யவேண்டிய வியாதிக்குச் செய்து உயிரைக்காப்பாற்றிக் கொள்வது மிகவும் நன்றாகும். இவர்கள் கொழுப்புச்சத்து உணவுகளைப் பாவிக்காமல் குறைவான, அளவான சத்துள்ள உணவுகளை உண்டுவருவதுடன், தினம் குறிப்பிட்ட நேர அளவு நடை நடந்து வருவதினாலும் நற்பயன் உண்டு. பைத்தியர்களின் சிறந்த ஆலோசனைப்படி தங்கள் நாளாந்த வேலைகளைச் செய்வதினால் நீண்டகாலம் சுகத்துடன் வாழமுடியும். கவலைப்படவேண்டாம். கைக்குத்தரசி, காளான், கீரைவகை வாழைத்தண்டு முதலியவற்றை உணவு எடுக்கும்போது பாவிப்பதுநன்று. நமது உடம்பில் கொழுப்புச்சத்து குறைய உலர்ந்த நார்சத்து உணவும் குறைந்த கொழுப்புச்சத்து உணவுகளை வயதிற்கும் உடல்நிலைக்கும் காலத்திற்கும் ஏற்ப கையாளவேண்டும். இவைபெரும்பாலும் தோல் உரிக்கப்படாத பழவகைகள், பச்சையான (அவியாத) காய், பழம் கறிவகைப்பொருட்கள் நன்றாகும். அத்துடன் ஓரளவு தேகப்பயிற்சியும் (குறைந்தநேரம்) செய்து வருவது நன்மை பயக்கும் எனக் கூறப்படுகின்றது. அல்லது சிறுதூரம் நடந்து கொள்வது நல்லதாகும். எதற்கும் தங்கள் வைத்தியர்களின் ஆலோசனை முக்கியமாகும்.


## Driving School



- ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை
- நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
- **G1, G2** தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
- வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்
- நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி - General Driving School

**Ministry of Transportation Approved Instructor - பேரின்பநாதன் வேந்தன் - 416-731-2829**

**Email: venthanctr@yahoo.com**



## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

## IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME

$12 per sq ft Net



**Bloor/Simcoe**
2 Minutes From Hwy.401,
1,580 Sq. Ft. Retail, Suitable for
Convenient Store, Doctors Office,
Pharmacy & Etc.

$395,000



**Finch/Middlefield**
Il Brick, Open Concept 4 Bedroom
Detached HomeProfessionally Finished
2 Bedroom Basement In-Law Suite
With Walk-Out To Patio

$799,000




**Cty Rd 21/Cty Rd 10 (Baxter)**
Used To Be Well Known Esso Gas Station On A Busy
Intersection Of Cr10/Cr21. Can Be Converted To Esso.
Main Floor Has Conv. Store And 28 Seats Restaurant,
2nd Floor Has One 3 Br And
One 2 Br Apartment. Gas Station Has Four Steel Tanks
With Cathodic Protection System.

$469,000




**Brimley/Steeles**
Great Location. Completely Renovated Recently.
Over $120,000 Upgrades.
Granite Floor In Foyer And Kitchen.

For Sale or Rent




Very good neighborhood
Open Any Business
Affordable Rent
Lots of parkings

## HERE IS YOUR CHANCE TO WIN




**Jayanthi Sritharan**
Real Estate Broker
**416.918.5872**
Email:sritharanj@rogers.com
web:www.jrealhomes.com

This is not intend to solicit properties currently listed for sale
** some conditions may apply



**HomeLife GTA Realty Inc., Brokerage***
Tel: 416.321.6969 Fax: 416.321.6963 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
*Each office independently owned and operated

# வாகனத்தில் செல்லும் சகலரும் ஆசனப்பட்டி அணியாவிட்டால்? தண்டனை?

## கனடிய தகவல் தொடர் 101

முன்னர் கார், வான் போன்ற வாகனங்களில் செல்லும் போது, சாரதியும் முன் ஆசனத்தில் அமர்ந்து போகின்றவர்கள் மட்டும் கட்டாயம் 'ஆசனப்பட்டி' அணிந்து கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தம் இருந்தமையால் பின் ஆசனங்களில் அமர்ந்து செல்பவர்கள் அனேகமானோர் ஆசனப்பட்டி தொடர்பாகவோ அல்லது அதன் முக்கியத்துவம் பற்றியோ சிந்திப்பதில்லை.

**முடிவு?**

பலவிபத்துகள் நடந்திருக்கும். சாரதி உட்பட முன் ஆசனத்தில் இருந்தவர்கள் சிறு உராவல் காயங்களுடன் தப்பித்து கொள்ள, பின் ஆசனங்களில் ஆசன பட்டிகள் அணியாது இருந்தவர்கள் பலமாக காயமடைந்ததும், பல இடங்களில் உயிர் இழப்புகளை எதிர் கொண்டதும் கனடாவில் வசிக்கும் எம் இனத்தவர்கள் மத்தியிலும் நடந்து பலரும் அறிந்த விடயங்கள் ஆகும்.

இப்படிப்பட்ட ஏராளமான விபத்து அறிக்கைகளின் புள்ளி விபரங்கள் காரணமாக ஒன்ராரியோ மாகாண அரசு கடந்த டிசம்பர் -01-2006 யில் இருந்து வாகனத்தில் செல்லும் சகலரும் சகல ஆசனத்தில் இருப்பவர்களும் ஆசனப்பட்டி அணிந்து கொள்ளல் வேண்டும் என்ற ஒரு சட்ட மூலத்தினை அமல் படுத்தியுள்ளது.

சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

**ஆசனப்பட்டி அணியாது வாகனத்தில் செல்வோர் பிடிபட்டால் தண்டனை என்ன?**
(According to the ontario Traffic Law act (106)

தண்டனை பணம் $60 - $500 டொலர் வரை இரண்டு புள்ளி மதிப்பீடுகளை (Demerit points) இழக்க வேண்டிவரும்.

பதினாறு வயதுக்கு உட்பட்டவர் பிரயாணியாக சேர்ந்து போகும் போது ஆசனப்பட்டி அணியாது விட்டால் அதன் தண்டனையினையும் சாரதி மீதே சுமத்தி அவரே அதனை அனுபவித்து கொள்ள வேண்டும். பதினாறு வயதுக்கு மேற்பட்டவர் பிரயாணியாக சேர்ந்து போகும் போது ஆசனப்பட்டி அணியாவிட்டால், அவர் தொடர்பான தகவல்களை பெற்று நேரடியாக மேற்குறிப்பிடப்பட்ட தண்டனை வழங்கப்படும் (தகவல்களை பெறும் அதிகாரம் பொலிசாருக்கு இருப்பது என்பதும் வழங்கியே தீர வேண்டும் எனவும் சட்டம் வலியுறுத்துகின்றது).

ஒன்ராரியோ மாகாண அரசின் வீதி ஒழுங்கு சட்டப் பிரிவு 106 என்பது

- ஆசன பட்டியின் அணிதல் என்பது எப்படி இருத்தல் வேண்டும் (கழுத்து பகுதியிலிருந்து அதனை பொருத்தும் நாரி வரை இருக்க வேண்டிய ஆசனத்திற்கு ஏற்ப இருத்தல் வேண்டும்)
- எந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு குழந்தைகளுக்குரிய (Child Seat Belt) ஆசனத்தில் பட்டியுடன் இருத்தல் வேண்டும் என்பது
- ஆசனபட்டி சரியாக வாகனத்தில் இல்லாதிருந்து கண்டுபிடிக்கப்பட்டால் தண்டனை
- இவற்றினை அணியாவிட்டால் தண்டனை
- ஆசனபட்டி அணிய தேவையில்லாத விதி விலக்குகள்.

போன்ற பல விடயங்களை தெளிவு பண்ணுகின்றது.

**குழந்தைகளுக்குரிய விசேட ஆசனமும் பட்டியும் (Child Booster Seat) எந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு கட்டாயம் இருத்தல் வேண்டும்?**

- எட்டுவயதுக்கு உட்பட்ட குழந்தைகள்
- 36 கிலோ (80 இறாத்தல்) நிறைக்கு குறையாத குழந்தைகள்
- 145 சென்ரி மீற்றர் (4 அடி 9 அங்குலம் உயரத்திற்கு குறைவான குழந்தைகள்)

கண்டிப்பாக குழந்தைகளுக்குரிய விசேட ஆசனத்தில் (Child Booster Seat) இருத்தி பாதுகாப்பாக ஆசனப்பட்டி அணிந்து இருத்தல் வேண்டும்.

**ஒன்பது கிலோ (20 இறாத்தல்) நிறைக்கு உட்பட்ட மிகச் சிறு குழந்தைகள் 9 -18 கிலோ (20 - 40 இறாத்தல்) நிறைக்கு உட்பட்ட சிறுகுழந்தைகளின் விசேட ஆசனமும் பாதுகாப்பாக எப்படி பட்டி பொருத்தப்படல் வேண்டும் என்பதும் சட்டத்தினால்** (Motor Vehicle Safety Standards Act) **வலியுறுத்தப்படுகின்றது?**

- எட்டு வயதினை கடந்த ஒரு பிள்ளை
- 36 கிலோ (80 இறாத்தல்) நிறைக்கு மேற்பட்ட ஒரு பிள்ளை
- 145 சென்ரி மீற்றர் (4' 9") உயரமுள்ள பிள்ளை

என்ற நிலையில் இருக்கும் பிள்ளைகள் காலை மடித்து சாதாரணமாக வசதியாக ஆசனத்தில் உட்காரலாம் என்ற நிலை உருவாகலாம் என எதிர்பார்ப்பதால் இவர்கள் விசேட ஆசனத்தில் அமர வேண்டிய தேவை இருக்காது. சாதாரண ஆசனப்பட்டியினை அணிந்து விட்டால் போதும் என சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.mto.gov.on.ca/english/safety/smart-love/index.shtml என்னும் இணையதளத்திற்கு நேரே செல்லும்போது குழந்தைகளுக்கான ஆசனம் (Child Booster seat) எப்படி தெரிவு செய்வது? எப்படி பாதுகாப்பாக பொருத்துவது? இதில் உள்ள சட்ட பிரச்சினைகள் போன்ற சகல விடயங்களையும் அறிந்து கொள்ளலாம்.

'Smart Love' என்னும் தலைப்பில் இக்குழந்தைகளுக்கான ஆசனம் தொடர்பாக ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இது தவிர பிரம்ரன் நகர அவசர தீயணைப்பு பிரிவினர் அண்மையில் இது தொடர்பான ஒளி (DVD) தட்டினை வெளியிட்டுள்ளனர்.

905.458.5580 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது Firelife@bramton.ca என்னும் முகவரிக்கு மின் அஞ்சலில் தொடர்பு கொண்டும் பெற்று கொள்ளலாம்.

**ஆசனப்பட்டி அணிய தேவையே இல்லாதவர்கள் யார்? யார்?**

பின்வருவோர் அல்லது பின்வரும் நிலையில் இருப்போர் ஆசனப்பட்டி அணிய தேவையே இல்லை என்பது சட்டங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1. ராக்ஸி சாரதிகள்

(ஆனால் ராக்ஸியில் செல்லும் பிரயாணிகள்



ஆசனப்பட்டி அணியாது பிடிபட்டால் பிரயாணிக்கே தண்டனை வழங்கப்படும். குழந்தைகளை ராக்ஸியில் கொண்டு போனால் குழந்தைகளுக்குரிய விசேட ஆசனமும் (Child Booster Seat) கொண்டு செல்ல வேண்டும் என்பதும் பிரயாணியின் பொறுப்பு. சட்டரீதியாக ராக்ஸி சாரதிக்கு இந்த பொறுப்பு இல்லை.

ராக்ஸியில் ஆசனபட்டி ஒழுங்காக இல்லாது விட்டாலேயே அதற்குரிய தண்டனையினை ராக்ஸி சாரதி எதிர்கொள்ள வேண்டிவரும்.

2. பொதுமக்கள் பிரயாணிகள் பேருந்துகளில் (Public Transportation bus like TTC) பிரயாணம் செய்வோர்.
3. அம்புலன்ஸ் சாரதிகள்
4. மருத்துவ ரீதியாக ஆதாரத்துடன் ஆசனபட்டி அணிய முடியாத நிலையில் நிரூபிப்பவர்கள்
5. வாகனம் பின்நோக்கி நகரும் போது
6. 40 கி.மீற்றருக்கு குறைவாக வாகனம் செலுத்தி அடிக்கடி இறங்கி ஏறும் நிலையில் தொழில் செய்வோர் (உதாரணம் வீட்டுக்கு வீடு பத்திரிகை விநியோகம், குப்பை எடுப்பவர்கள்)

இப்படி சிலருக்கு ஒரு விதிவிலக்கும் சட்டங்களில் உண்டு.

இவை தொடர்பாக மேலதிக தகவல்கள் பெற வேண்டுமாயின் www.mto.gov.on.ca என்ற இணையதளத்தினுள் சென்று பார்வையிடலாம் அல்லது 1.800.268.4686 என்னும் தொலை பேசிக்கு அழைத்தும் தகவல்களை பெறலாம்.



Scarborough
Truck & Trailer Centre

Check out the latest garage, specializing in the maintenance of trucks and trailers by Birchmount and Ellesmere. Cars are also serviced and washed; auto-detailing is also provided. The hours; flexible, rates; reasonable, and the service is great!
What more could you really ask for?

• நட்பான சேவை • நியாயமான கட்டணம்
• ஒரு முறை வந்து பாருங்கள்




1530 Birchmount Road #12
Scarborough, Ontario M1P2G9
Call 4167524500 for more information.

# பிள்ளையும் சேலையும்

## ஓடும் நீர் உறைவதில்லை 85

வாழ்வியலில் சிறப்பான உண்மை ஒன்றுண்டு. ஒன்றினது உள்ளீட்டைப் பொறுத்தே அதன் வெளியீட்டின் தன்மையும் தரமும் அமைகின்றது. இந்த உண்மை நாம் பாவனைக்குட்படுத்தும் பொருட்கள் முதல் நமது நாளாந்த செயற்பாடுகளைத் தீர்மானிக்கும் மனித மனோ பாவங்களையும் உள்ளடக்கும். வெளியீட்டின் தரம் எவ்வாறு அமையவேண்டும் என நாம் எதிர் பார்க்கின்றோமோ அதற்கான உள்ளீடு களும் தரமானவையாக அமைய வேண்டியது தவிர்க்க முடியாததே.

நமது வாழ்க்கையின் தரம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பது பற்றிப் பெரும்பாலும் நாம் கவனம் செலுத்துவ தில்லை. எமது தரம் எல்லாம், ஆபரணங்கள், ஆடைகள் வீடு, வாகனம் என்பவற்றில் தான் இருப்பதாகவும் அதற்கு அடுத்த படியாக உணவு உறக்கம், உடல் நலம் என்பன இருப்பதாகவும் கணிப்பிடுகின்றோம். இவ்வாறான வெளிப்புற உட்புற விடயங்கள் என நாம் பல்வேறு விடயங்களைக் கருதிக் கொண்டாலும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக நமக்குத் தேவையான ஒன்று இருப்பதை நாம் மறந்து விடுகிறோம் அல்லது புறக்கணித்துவிடுகிறோம். இதனால் தான் பொருளாதார ரீதியில் தம்மைத் தரமானவர்கள் என நினைப்பவர்கள் கூட ஒரு நிலைக்கு அப்பால் தம்மை நகர்த்த முடிவதில்லை.

உலகாயுத, பொருளாதார விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வாழ்க்கையை நகர்த்துபவர்கள் அடிக்கடி பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது தளர்ந்து போய் விடுகிறார்கள். ஏதோ ஒருவகையான சுயதடை ஒன்றுக்கு அவர்கள் கட்டுப்பட்டு விடுகிறார்கள். அதுமட்டுமன்றி அவர்களது நடத்தைகள் பெரும்பாலும் தன்னலம் சார்ந்தாகவே அமைந்திருக்கும். அத்துடன் மற்றவர்கள்மீது ஒரு சந்தேகப்பார்வை இருந்து கொண்டே இருக்கும். இதனால் தமது பிரச்சினைகளில் இருந்து வெளிவருவதற்குத் தேவைப்படும் ஒத்துழைபை மற்றவர்களிடம் இருந்து பெற முடிவதில்லை. ஏனெனில் வாழ்க்கையின் தரம் என்பது எங்கே ஆரம்பிக்கின்றது என்ற தெளிவின்மையால் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள்.

ஒருவரது உண்மையான வளர்ச்சி என்பது இரண்டு விடயங்களில் தங்கியுள்ளது. அதாவது ஆளும் வளரவேண்டும். அதற்கேற்ப அறிவும் வளரவேண்டும். உடம்பின் வளர்ச்சிக்கு ஊட்டச்சத்து போல் ஒருவரது உள்ளத்தின் - மனோபாவ வளர்ச்சிக்கும் உள்ளீடுகள் அவசியமாகின்றன. குறிப்பாக ஒரு மனிதனது மனோபாவ வளர்ச்சியில் அவன் வாழும் சூழல் அதிகமான பங்களிப்பைக் கொடுப்பதாலும் மிக முக்கியமான அடிப்படை மனோபாவங்கள் குழந்தைப் பருவத்திலேயே விதைக்கப்பட வேண்டியிருப்பதாலும் இக்கட்டுரை தாய்மாருக் கான சிறப்புக் கட்டுரையாக அமைகின்றது.

முதலில் குழந்தையொன்றினுடைய சிறப்புத் தன்மையைப் பார்ப்போம். ஒவ்வொரு குழந்தையும் இவ்வுலகிற்கு வரும்போது எந்தவிதமான முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுடன் வருவதில்லை. எதுவுமே அறியாத அதே நேரத்தில் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டிய தேவைப்பாட்டுடன் தனது வாழ்க்கையை ஆரம்பிக்கின்றது. இங்கே ஒரு குழந்தை தனது பிறப்பில் இருந்து தனது கற்கையை ஆரம்பிக்கின்றது என்ற அடிப்படை உண்மையை அறிந்து கொள்ளல் வேண்டும். அதன் ஆரம்பகாலக் கற்றல், விடயங்களை உள்வாங்குதல் என்ற அடிப்படையில் இடம்பெறுகின்றது. தனது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு சிரிப்பு அழுகை என்ற இரண்டைத் தவிர வேறு எதனையும் அதனால் பயன்படுத்த முடிவதில்லை. ஆனால் அதனால் உள்வாங்கப்படும் விடயங்கள் அதன் ஐம்புலன்களால் முற்றுமுழுதாக உள் வாங்கப்படுவது மட்டுமல்ல அந்த விடயங்கள் பற்றிய சரி - பிழை, தரம் - தரமின்மை, நல்லவை - கெட்டவை என்ற எந்தவித பகுப்பாய்வுக்கும் இடமளிக்காமல் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

குழந்தைகளின் ஆரம்பகாலக்கற்றலானது விடயங்களை முற்று முழுதாக உள் வாங்குதல் என்பதால் இந்தக் காலப் பகுதியிலேயே சிறந்த மனோபாவங்களை உருவாக்குவதற்கான மிகச் சிறந்த வாய்ப்பையும், பெற்றோர்களுக்கு வழங்கு கிறார்கள். அதாவது முதல் ஐந்து வருடங்கள் சிறந்த விடயங்களை விதைப்பதற்கான காலப்பகுதியாகும். ஆனால் துரதிஷ்டவசமாகப் பெரும்பாலான பெற்றோர்கள் இந்தக் காலப் பகுதியைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதில்லை. இதற்கு அடிப்படையாக அமையும் காரணி என்னவெனில் இக்காலப்பகுதியில் குழந்தை களின் கற்கும் திறன் பற்றிய தவறான மதிப்பீடாகும். அதுமட்டுமன்றி குழந்தையின் உடல்வளர்ச்சி சம்பந்தமாக அதிகளவு நேரத்தைப் பயன்படுத்துபவர்களாகவும் இக்காலப் பகுதியைப் பயன்படுத்துகிறார்கள். இங்கே அடிப்படையில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் ஒரு குழந்தையின் வளர்ச்சியில் உடல் வளர்ச்சியும், உளவளர்ச்சியும் சமநிலைப் படுத்தப்பட வேண்டியது என்பதாகும்.

குழந்தை வளர்த்தல் என்பது மிகவும் சிக்கலானது என்ற கருத்துப் பலரிடம் காணப்படுகின்றது. எங்களால் இயன்றதை நாம் செய்கிறோம். அதன் பிற்பாடு நமது கையில் ஒன்றும் இல்லை எனக் கூறும் பெற்றோர்களும் உண்டு. குழந்தைவளர்ப்பு என்பது இருபக்க விளைவுகளையும் அதற்கான மாற்றங்களையும் வேண்டிய நிற்கின்றது. முதலில் இருபக்க விளைவுகள் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். குழந்தைகளின் உண்மையான வெளிப் பாடானது அதன் பெற்றோர்களது மனோ பாவங்களின், நடத்தைகளின், வார்த்தைகளின்



KG Master-kgmaster@rogers.com

பிரதிபலிப்பாகவே அமைகின்றது. குறிப்பாகக் கூறுவதாயின் ஒரு குழந்தையின் ஆரம்பகாலச் சூழலானது பெற்றோரை மையமாகக் கொண்டு இடம்பெறுவதால் அந்தச் சூழலில் இருந்து கற்றுக்கொள்ளும் விடயங்களை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது. இதனால் தான் குழந்தையின் ஆரம்பகாலச் சூழல் தரமானமுறையில் அமைக்கப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாததா கின்றது.

ஒரு குழந்தையின் ஆரம்பகால நெருக்கத்துக்கும் அதன் உளவியல் வளர்ச்சிக்கும் முதன்மைக்காரணியாக அமைபவர் அக்குழந்தையின் தாயாவார். இந்த இறுக்கம் அல்லது இணக்கமானது குழந்தையின் படிமுறை வளர்ச்சிக்கான ஒரு பாதையை வகுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. இந்தச் செல்வாக்கானது குழந்தையின் மனோபாவத்தில், நடத்தையில் மிகவும் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இந்தவகையான விடயங்களின் ஆழமும் உறுதியும் அக்குழந்தையின் வாழ்வியலைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைந்து விடுகின்றது. இதனால்தான் நாம் குழந்தை களின் ஆரம்பகாலப்பகுதியில் அக்குழந்தை யின் தாயின் நடத்தைகள், மனோபாவங்கள், வார்த்தைகள் என்பன நெறிப்படுத்தப்பட்ட முறையில் அமைவது அவசியமாகின்றது. இங்கே நெறிப்படுத்தல் என்பது குழந்தையுடன் நேரடியாகவோ அல்லது குழந்தை யுடனல்லாத ஆனால் குழந்தை பிரசன்னமாக இருக்கும் இடங்களில் எவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும் என்பது பற்றிய தெளிவாகும். இந்தத் தெளிவானது குழந்தைக்கு ஒரு தெளிவான தகவலைக் கொடுப்பதால் அத்தகவல்கள் அக் குழந்தையின் செயற்பாடுகளில் மிகவும் சிறப்பாகப் பிரதிபலிக்கின்றன. ஒரு குழந்தை யின் தரம் அக்குழந்தையின் தாயின் தரமான செயற்பாடுகளைப் பிரதிபலிப்பதனால் தான் ஒரு குழந்தையை வைத்துத் தாயின் தரத்தை மதிப்பிடமுடிகிறது. ஒரு சேலையின் இயல்பும் தரமும் அதன் நூலைப் பொறுத்தமைவது போல் ஒரு குழந்தையும் தாயைப் பொறுத்தமைகின்றது.

இப்போது ஒரு தாயின் முக்கியமான பங்களிப்பு என்னவாக இருத்தல் அவசியம் என்பதைப் பார்பபோம். ஒரு தாய்க்கு மிகவும் சவாலாக அமைவது குழந்தையுடனான சூழலையும் குழந்தையுடனல்லாத சூழலையும் கையாள்வ தாகும். பெண் என்ற நிலையில் இருந்து தாய் என்ற நிலைக்கு மாற்றப்படும் போது இயல்பாகவே சிலமாற்றங்கள் மனோபாவ ரீதியில் இடம் பெறுகின்றன. இம்மாற்றங் களில் அதி பெரும்பான்மையானவை குழந்தையின் உடல்நலம் சார்ந்ததாகவே அமைகின்றன. குழந்தையின் சிறந்த மனோ பாவ வளர்ச்சிக்குத் தாயின் பங்களிப்புக்கு ஈடாக எதுவுமே இல்லை. இதனால்தான் தாயானவர் தனக்குக் கிடைக்கும் இந்த அரியவாய்ப்பைச் சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் எதிர்காலத்திற்கான சிறந்த ஒருவரைத் தயார்படுத்தமுடியும்.

முதலில் தாயானவர் இந்தத் தலை சிறந்த பொறுப்பை எவ்வாறு கையாளலாம் என்பதைப் பார்ப்போம். மிகவும் சுருக்கமாகவும் அதேநேரத்தில் விளக்கமாகவும் கூறுவதாயின் தனது குழந்தையின் உடல் நலத்தில் ஒரு தாய் எந்த அளவுக்குக் கண்ணும் கருத்துமாக இருக்கிறாரோ அந்த அளவுக்கு உள நலத்திலும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். குழந்தைக்கு ஊட்டப்படும் உணவில் அதன் உடல் வளர்ச்சிக்கு அதன் வயதுக்கேற்ப என்னென்ன ஊட்டச்சத்துக்கள் அவசியம் எனக் கருத்திற் கொண்டு செயற்படுகின்றாரோ அதே போன்று குழந்தையின் உளவியல் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தல் வேண்டும். என்னென்ன விடயங்களில் ஒரு தாய் தனது முழுமையான பங்களிப்பில் இருந்து தவறக்கூடாது என்பதற்கு அதிகளவு ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஒரு குழந்தையின் சிறந்த மனோபாவங்களின் உள்ளீடாகத் தாயானவர் சிறந்த, உயர்வான, ஊக்கமளிக்கின்ற வார்த்தைகளைப் பயன்படுத்து வது, நமது உடற்பாஷை மூலம் உணர்வுபூர்வமான சிறந்த வெளிப்பாடுகளுக்கு உதவுவது, மனப்பயம் ஏற்படக்கூடிய சூழல்களைத் தவிர்ப்பது குடும்பத்தில் மற்றவர்களது தவறான அணுகுமுறைகளை மட்டுப்படுத்துவது, குழந்தையின் வயதுக்கும் அனுபவத்துக்கும் ஏற்ற முறையில் அதன் செயற்பாடுகளைச் செய்வதற்கான வாய்ப்புக் களைக் கொடுத்து அவை நிறைவேற்றப்படும் போது பாராட்டுவது என முக்கியாமன விடயங்களை நாளாந்தம் நடைமுறைப் படுத்துவதாகும். அத்துடன் இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு குழந்தையின் சிறப்பான உளவியல் வளர்ச்சியின் அத்திவாரமாக அமைய வேண்டியது அந்தக் குழந்தைபற்றிய தாயின் உண்மையான உறுதியான, சலனமற்ற நேர்த்தியான எதிர்பார்ப்பாகும். தனது குழந்தைபற்றிய எந்தவொரு விடயத்திலும் தனது ஏனைய குழந்தைகளுடனோ அல்லது பிறருடைய குழந்தைகளுடனோ ஒப்பீடு செய்து தாழ்வாகவோ அல்லது உயர்வாகவோ மதிப்பீடு செய்தலாகாது. தாழ்வாக எண்ணுவது தவறுதான் ஆனால் உயர்வாக எண்ணுவதில்

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3223 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3223

On TV

Saturdays at 10:30 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219



# ஆயுதம்

பண்டைக்காலம் தொட்டே மனிதன் தனது தற்பாதுகாப்பிற்காவும் தனது இனத்தின் தனித்துவத்தை நிலைநாட்டவும் பகைவரை ஒழித்துக்கட்டி தனது ஆட்சியை நிலை நிறுத்தவும் ஆயுதங்களையே பயன்படுத்தி வந்துள்ளான். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதற்கமைய உடல் வலிமையே ஆயுதமாக கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. இக்காலமல்யுத்தப் போட்டியும் ஜல்லிக்கட்டும் இதனையே உணர்த்தி நிற்கின்றன. கானகச் சட்டமும் பலம்பொருந்திய மிருகமே பகையை அழித்து காட்டு ராஜாவாகத் திகழ்ந்த காதையும் உள்ளது. ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதன் பின் உடல் பலத்தையே உயரியபலமாகக் கருதியகாலம் மறைந்து கருவிகளின் பலமே காலாட்படையின் வலிமை எனக் கருதப்பட்டது. ஆயுதபலமுள்ள நாடே உலகினை ஆட்டிப்படைப்பதை நாம் இன்று காண்கின்றோம்.

இரும்பின் உபயோகம் அறிமுகமாவதற்கு முன் கல்லால் செய்யப்பட்ட கருவிகளும் மரத்தால் செய்யப்பட்ட கருவிகளுமே ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. வில், அம்பு, தடி, ஈட்டி, சம்மட்டி என்பன அவற்றுள் அடங்கும். பகைவரை விரட்டவே இவை அதிகமாகப் பயன்பட்டனவேயொழிய அவர்களுக்கு எதுவித பெரிய ஊறும் இவற்றால் செய்யமுடியவில்லை. இவை தற்பாதுகாப்பு ஆயுதங்களாகவே பயன்பட்டன.



ஆயுதங்களின் முன்னோடிகள் இவை யெனலாம். வீரன் கையில் இருக்கும் துரும்பும் அவனுக்குத் துணையே.

இரும்பு யுகம் ஏற்பட்டபின், மனிதன் இரும்பிலான பொருட்களை பெருமளவில் உபயோகிக்க முற்பட்டான். வீட்டுப்பாவனைப் பொருட்கள் முதல் போக்குவரத்து சாதனங்களிலிருந்து போர்க்கருவிகள் வரை இரும்பினாலேயே செய்யப்பட்டன. இவை உறுதியானவையாக இருந்ததுடன் நீண்டநாள் பாவிக்கக்கூடியனவாகவும் இருந்தன. கத்தி, வாள், கோடரி, அரிவாள், பீரங்கி, நவீனகால சுடுகலன்கள் எல்லாம் இவற்றுள் அடங்கும். தாக்குதலை உறுதியாகவும் உடனடியாகவும் ஏற்படுத்தக்கூடியவையாக இவை இருந்தன.

அலெக்சாண்டர் இந்தியா மீது படைஎடுத்து வந்தபோது மாவீரன் புருசோத்தமன் அவனது படைகளை சிந்து நதிக்கு கிழக்கே விடாமல் தடுத்து நிறுத்தினான். காரணம் வந்தவன் கைகளிலும் வாள் இருந்தது. எதிர்த்தவன் கைகளிலும் வாள் இருந்தது. இதனால் வெற்றி காண முடியவில்லை. இப்படியாக வாள் போர்க் கருவியாக இருந்த காலகட்டத்தில் இருதரப்பினராலும் வெற்றி கொள்ள முடியவில்லை. ஆனால் வெள்ளையன் காலடியில் இந்தியா விழுந்தபோது இந்தியா அடிமைப்பட்டது. காரணம் வெள்ளையன் பீரங்கிகளைப் பயன்படுத்தியபோது இந்தியர் வாளைக் கையாண்டனர். வெள்ளையன் வெற்றி கொண்டான். இதனால் பீரங்கியின் பலம் விளங்குகின்றது. எனவே தன்னை நவீனப் படுத்தாத எந்த இனமும் நசிந்தே போகும் என்பது தெளிவாகின்றது.

பழைய கற்காலம், புதிய கற்காலம், உலோககாலம் என்ற நாகரிகங்களெல்லாம் ஆயுதங்களை முன்னிறுத்தியே அழைக்கப் பட்டன. இன்றைய கால கட்டத்தை ஏ.கே 47 நாகரிக யுகம் என்று அழைப்பது பொருத்த முடையதாகும். ஒவ்வொரு நாடும் ஆயுதங்களுக்கும் படைகளுக்கும் செலவழிக்கும் பணத்தை சேர்த்து வைத்திருந்தால் உலக மக்களின் வறுமையை விரட்டி அடித்து விடலாம். அவர்களை புதுவாழ்வு காண வைக்கலாம். ஆயுத உலகம் தான் மனித குலத்தின் அவசரத் தேவையாகும். அப்பொழுது தான் மனிதர் களிடமிருந்து பயமும், பீதியும், அவஸ்தையும், அவலமும், அழிவும் அகலும்.

ஏ.கே 47 இன்றைய அதிநவீன சுடுகலனாகும். இதிலுள்ள முதலெழுத்துக்களான ஏ - தானியங்கி என்பதையும் கே - என்பது அதைக் கண்டுபிடித்தவரான கலாஷ்நிக் கோவையும் குறித்து நிற்பதாகும். 47 என்பது அது வடிவமைக்கப்பட்ட ஆண்டாகும். இது ஒரு ரஷ்ய தயாரிப்பாகும். ஆனால் சீனா அதை தயாரித்து மலிவாக்கி விட்டது. சீனாவில் இப்பொழுது இரண்டு கோடி ஏ.கே. 47 இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தியாவில் இதிலும் பார்க்க அதிக தொகை இருப்பதாகக் கூறப்படுகின்றது. இது பன்முகப் பயன்பாடுடையது. இதன் கொள்ளளவு முப்பது தோட்டாக்கள். இதன் வீச்சு 900 அடி தூரம். தோட்டாக்களை வெகுவிரைவில் நிரப்பி விடலாம். ஒரே நிமிடத்தில் 600 சுற்றுக்கள் சுடலாம். நின்றும் சுடலாம். உட்கார்ந்தும் சுடலாம். படுத்தும் சுடலாம். இதனைக் கையாள்வது சுலபம். இதன் நோக்கு தவறுவதில்லை. இதன் நீளம் 87 சென்ரி மீற்றர் நிறை 4.3 கிலோகிராம். சுட்டுக் கொண்டேயிருந்தாலும் இயந்திரம் சூடாவதில்லை. இதன் முனைக்கத்தி ஆயுத பாணிக்கு பாதுகாப்பு தருவதுடன் குற்றுயிராய் கிடக்கும் எதிரியை குத்திக் கொல்வதுடன், மின்சார வேலியையும் அறுத்தெறிந்து முன்னேறும் ஆற்றலுடையது. இதனை அகில உலகத்திற்கும் அறிமுகப்படுத்திய பெருமை ரஷ்யாவைச் சேரும்.

வள்ளுவரும் ஓரிடத்தில் துப்பாக்கியை பயன்படுத்தியுள்ளதைக் காணலாம். 'துப்பார்க்குத் துப்பாய் துப்பாக்கித் துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை' என்று மழை பற்றிக் கூறியுள்ளார். புராணங்களிலும் இதிகாசங்களிலும் கதாயுதம் என்ற ஆயுதம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வரலாறுகளை வாசிக்கும் போது ஆயுதங்களின் அவசியம் உணரப்படும். நிராயுதபாணியாய் நின்ற இராவணனை நோக்கி 'இன்று போய் போர்க்கு நாளை வா' என்று இராமன் கூறியது, ஆயுத மற்றவனை கொல்வது வீரனுக்கு அழகல்ல என்பதை உணர்த்துகின்றது. வீரம் விளங்கிய குடி மறவர் குடி எனப் போற்றப்படுகின்றது. 'கயவனுக்கு கன்னிப்பெண் தருவது செருப்படி'. எனவே செருப்பே அவளது ஆயுதம். ஆயுதங்கள் கூர்மழுங்கி இருப்பதே அரசனது வீரத்திற்கு அறிகுறி என்பதனை அவ்வை வாக்குமூலம் அறிகிறோம்.

உலக நாடுகளில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த உலக அமைப்பான ஐ.நா.சபை தீவிரமாக முயற்சித்து வருகின்ற போதிலும் உலக நாடுகளில் நாளாந்தம் பொருள் அழிவும் உயிரழிவுகளும் ஏற்பட்டு வருவது ஒரு துர்ப்பாக்கிய நிலையேயாகும். ஒவ்வொரு நாளும் உலகில் எந்த ஒரு மூலையிலாவது கலகம், சண்டை, போர் நடந்து கொண்டு இருப்பதைக் காணலாம். குறிப்பாக இலங்கையில் நடைபெற்றுவருவது பேரவலம். விஞ்ஞான விருத்தியினால் போர்க்கருவிகள் பெருகியுள்ளன. ஆயுத உற்பத்தி நாடுகளும் தரகர்களும் போர் நடைபெறுவதையே வரவேற்கின்றனர். இதனால் அவர்கள் பெரும்பணம் ஈட்டுகின்றனர்.

மனித மனத்தில் ஆழமாக வேரூன்றியிருக்கும் போர் வெறியைத் தணிப்பது இலகுவானதல்ல. போர்வெறிக்கு ஆயுதப்பெருக்கம் தீனி போடுவதென்றே கூறவேண்டும்.



**நா. க. சிவராமலிங்கம்**


Walk For Values

## GO GREEN CANADA!

## Walk for Values

For the first time such a big community initiative taking place at Toronto Downtown where over 6,000 participants led by Hon. George Smitherman, Ontario's Deputy Premier and Minister of Energy and Infrasturucture, will pledge to save the Planet and reduce the carbon footprint by taking positive actions at individual, family, community and corporate levels. Let us make the difference by practicing values and bringing a "culture of conservation" in all walks of our lives. We can't always count on the Government to take the first steps. It is time to act by taking the first step ourselves to avert the greatest threat facing the planet today! Please join in the 2 ½ Km. Walkathon with family and friends on:

***Sunday, May 31, 2009 at 10:30 AM***
***(Registration begins at 10:00 A.M.)***

***Yonge Dundas Square, Toronto***

***"A Walk for Me, My Family and My Community!"***

***This is a no charge event and please register at: www.walkforvalues.com***

Mahatma Gandhi said: "Become the change you want in the world".
How is this Walk different? Unlike other walks, this is not a fund-raiser. You will not raise money for any cause by soliciting monetary pledges! Rather, you will make the world richer by pledging your commitment to practice values and caring for the environment.
Humanity is living on the planet with limited resources and reduction of pollution will only begin with the reduction of human desires through practicing human values which is good for both our wallet and planet.
Hosted By: The Parent Council

ஆரம்பகாலம் தொடங்கி கருணாநிதியின் அரசியலை பக்கத்தில் இருந்து கவனித்து வருபவன் நான். இப்பொழுதுதான் என்றில்லை, எப்போதுமே கருணாநிதி வஞ்சகமான அரசியல் வாதியாகத்தான் இருந்திருக்கிறார். கல்லடிக்குடி போராட்டத்தில் ஓடாத இரயிலுக்கு முன்னே படுத்தது தொடங்கி அவரது ஏமாற்று நாடகங்கள் எத்தனை, எத்தனை? ஈழத் தமிழர்கள் போராட்டத்தில் சரியான ஒரு நிலைப்பாடு எடுத்து விடுதலைப்புலிகளை எம்.ஜி.ஆர். ஆதரித்ததும், எங்கே தன்னுடைய ‘தமிழினத் தலைவர்’ பதவி பறி போய்விடுமோ என்று அஞ்சிய கருணாநிதி தன் எம்.எல்.சி. பதவியை இராஜினாமா செய்தார். அதனை பெரிய தியாகம் மாதிரி, கடந்த இருபது ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டே இருக்கிறார். இத்தனைக்கும் ‘தமிழினத் தலைவர்’ என்ற அடைமொழி கருணாநிதிக்கு பெரிய தலைவர்கள் யாரும் கொடுத்ததல்ல, அது அவர் தனக்குத்தானே கொடுத்துக்கொண்ட பட்டம். இன்று இலங்கைத் தமிழர் அவலங்களில் அவர் நடத்திய நாடகங்கள் எடுபடாமல் அம்பலப்பட்டு நிற்கிறார் கருணாநிதி. ‘தமிழினத் தலைவர்’ என்றவரை ‘தமிழினத் துரோகி’ என்கிறார்கள் மக்கள், ‘முத்தமிழ் வித்தகர்’ இல்லை, முத்தமிழை வித்தவர் என்கிறார்கள்.

கலைஞர் தொலைகாட்சியில் ஒரு காட்சியை திரும்ப திரும்ப காண்பிப்பார்கள். ஒரு மனிதனை கடலில் தூக்கிப் போடுவார்கள்.



உடனே கருணாநிதியின் குரல் ஒலிக்கும்: “தமிழர்களே, தமிழர்களே... என்னைக் கடலிலே தூக்கி வீசினாலும் கட்டுமரமாக மாறுவேன், தமிழர்கள் ஏறி பயணிக்கலாம், கவிழ்த்து விடமாட்டேன்.” இன்றைக்கு என்னாவாயிற்று? ஈழத் தமிழர்களைக் கவிழ்த்துவிட்டாரே கருணாநிதி. அவர் சொல்கிறார்: “பிரபாகரன் பிடிபட்டால், போரால் மன்னனைப் போல் நடத்த வேண்டும்.” சிங்கள அரசுக்கு ஆலோசனை கூறுகிறாராம். இது மூளை பிசகி பேசுகின்ற

தொடர்ச்சி 24ஆம் பக்கம்



# “தேர்தலுக்குப் பிறகும்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

பேச்சு. பிரபாகரன் பற்றி பேச இவருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது. பிரபாகரன் ஒரு போராளி. தன் இனத்தின் விடுதலைக்காக போர்க்களத்தில் நிற்பவர். கருணாநிதி, ஒரு நயவஞ்சகர். தன் சொந்த இனத்தை ஏமாற்றி செல்வச் செழிப்பில் திளைப்பவர். “என் இனத்துக்காக போராடி சாக நான் தயாராக இருக்கிறேன், என் மகனும் போராடி சாவான், என் பேரனும் போராடுவான், சாவான்” என்கின்ற



சந்திப்பு: விஜயவேலன்

பிரபாகரன் எங்கே? பதவி வெறிக்காக அலைந்து திரியும் கருணாநிதி எங்கே?
அறிஞர் அண்ணா நல்ல நோக்கத்தில்தான் தி.மு.க.வை தொடங்கினார். கருணாநிதி போன்றவர்கள் அதிகார மையமான பிறகு, “என்னுடைய பங்கை நான் பெறுவேன், உங்களுடைய பங்கை நீங்கள் பெறுங்கள்” என்று தொண்டர்களை உணர்வற்ற கட்டமாக்கி விட்டார்கள். அலிபாபாவோடு இருந்த நாற்பது திருடர்களைப் போல், இப்போது கருணாநிதியும் அவருடன் இருக்கும் தி.மு.க. முக்கியப் புள்ளிகளும் இருக்கிறார்கள். ஒரு பெரும்கனவுடன் கொள்கை பலத்துடன் தன் பயணத்தைத் தொடங்கிய கட்சி, இப்போது கொள்ளைக் கூட்டமாகிவிட்டது.

கேள்வி: புலிகளை கடுமையாக எதிர்த்து வந்த ஜெயலலிதா, திடீரென்று தனித் தமிழீழ ஆதரவு நிலைப்பாடு எடுத்ததற்கு தேர்தல்தான் காரணமோ என்ற அய்யப்பாடு தமிழ் உணர்வாளர்கள் அனைவருக்கும் இருக்கிறதே?

பழ.கருப்பையா: அம்மா அவர்கள் இதுவரை தனித் தமீழம் பற்றி பேசவில்லைதான். அதற்காக இப்பொழுது பேசுவதை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது சரியல்ல. அவரிடம் ஏற்பட்டுள்ள மனமாற்றத்துக்கான காரணத்தை அவர்கள் தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். “துப்பாக்கி முனையில் குடும்பம் குடும்பங்களாக தமிழர்களை அகதி முகாமில் அடைத்துவிட்டு, அவர்களின் இல்லங்களில் சிங்களவர்களைக் குடியமர்த்துகின்றது, ராஜபக்ஷே அரசு. ஸ்ரீரவிங்கர் காண்பித்த வீடியோ ஆதாரங்களில் அது தெளிவாக இருக்கிறது. இந்நிலையில் இனிமேல் தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து வாழ வாய்ப்பேயில்லை. எனவே, வங்கதேசத்திற்கு இந்திய இராணுவத்தை அனுப்பி தனிநாடாக்கியது போல, இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்பி ஏன் தனித் தமிழீழம் பெற்றுத்தர முடியாது” என அவர் கேட்கிறார். அவர் தேர்தலுக்காகச் சொன்னாரா, தேர்தலுக்குப் பிறகும் தனது முடிவில் உறுதியுடன் இருப்பாரா என்பதை இன்னும் சிறிது நாட்களில் பார்க்கத்தானே போகிறீர்கள்.

கேள்வி: ஈழத் தமிழர் ஆதரவாளர்களான கி. வீரமணியும் சுப. வீரபாண்டியனும்கூட கருணாநிதியின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றார்களே?

பழ. கருப்பையா: சுப. வீரபாண்டியனும் கி. வீரமணியும் ஈழத் தமிழர்களுக்காக உலகமெல்லாம் சென்று பேசியவர்கள். ஈழத்தில் என்ன நடக்கிறது என்பதையும், ஆரம்பகாலத்தில் இருந்து இன்றைக்கு வரைக்கும் அதில் இந்தியாவின் தலையீட்டையும் நன்கு தெரிந்தவர்கள். இப்பொழுது சிங்கள ராணுவத்துடன் இணைந்து இந்திய ராணுவம்தான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்டுக் கொண்டிருக்கிறது என்பது இவர்களுக்கு தெரியாதா என்ன? இதற்குப் பின்புலமாக மன்மோகன் சிங்கின் மத்திய அரசும், கருணாநிதியின் மாநில அரசும் இருப்பது இவர்களுக்கு தெரியாதா?

கடந்த மூன்று மாதங்களாக ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் வீறுகொண்டு எழுந்த எழுச்சியான போராட்டங்கள் அனைத்தையும் தன் காவல் துறையின் மூலம் ஒடுக்கினார் கருணாநிதி. உண்மையில் அங்கே என்ன நடக்கிறது என்பதை, ஊடகங்களை ஒடுக்கியதன் மூலம் மக்களுக்கு தெரியாமல் பண்ணினார். போதாதற்கு மனிதச் சங்கிலி, சட்ட மன்றத்தில் தீர்மானம், அனைத்துக் கட்சி கூட்டம் என்று காலம்கடத்தி மக்களின் எழுச்சியை நீர்த்துப்போகச் செய்தார்.

ஒரு தடவை சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டால் அது தமிழக மக்களின் ஒட்டு மொத்த கருத்து என்று பொருளாகும். எத்தனைத் தீர்மானங்கள் போட்டார் கருணாநிதி. எத்தனை முறை அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார்? எம்.பி.க்களைத் திரும்ப பெறு, அதோடு மத்திய அரசும் முடிவுக்கு வரும். மத்திய அரசு கவிழ்ந்து விட்டால் இந்திய ராணுவம் எப்படி இலங்கையில் இயங்க முடியும். இதனால் ஈழத் தமிழர்கள் வாழ்வு விடியும் என்றால், செய்வோம் என்றவர் அப்புறம் என்ன செய்தார் என்பது உலகத் தமிழர்களுக்குத் தெரியும். இப்போது, ‘உயிரை விடுகிறேன்’ என்று பம்மாத்து செய்யும் கருணாநிதி, “பதவியை விடுவேன்” என்று என்றாவது சொல்லியிருக்கிறாரா? எவ்வளவு பெரிய பித்தலாட்டம் இது. இன்றுவரை அங்கே நடந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழர் படுகொலையில் இந்திய ராணுவத்தின் பங்கைப் பற்றி கருணாநிதி பேசவில்லை.

இதெல்லாம் வீரமணிக்கும் சுபவீக்கும் தெரியாதா? தங்களின் சொந்த நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கருணாநிதிக்கு ஜால்ரா அடிக்கும் இவர்கள், ஈழத்தமிழர் படுகொலையிலும் அதையே செய்தது கேவலமானது. இவர்களுக்கு வெட்கமில்லையா? “ஆ.... கருணாநிதி உண்ணாவிரதம் இருக்கிறார்” என்று வீரமணி பதறுகின்றார். அப்பொழுதே, கருணாநிதி மதிய உணவுக்கு வீட்டுக்குப் போய்விடுவார் எனபதும் வீரமணிக்குத் தெரியும். கருணாநிதியின் கபட நாடகத்தில் இவர்கள் எல்லோரும் உபநடிகர்கள்.

கேள்வி: 2009 இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை தமிழகத்தில் நடைபெறுகின்றது. இதன் முடிவு எவ்வாறு இருக்கும் என யூகிக்கிறீர்கள்?

பழ.கருப்பையா: மக்களின் நாடியைப்பிடித்து பார்த்துவிட்டு வந்த தைரியத்தில் சொல்லுகிறேன், 40க்கு 40ம் எங்கள் அணி வெற்றிபெறும். கருணாநிதி கட்சிக்காரர்கள் மக்களை பணத்தால் வாங்கிவிட முடியும் என நினைக்கின்றனர். அந்த அளவுக்கு பணத்தை அவர்கள் கொள்ளையடித்து வைத்திருக்கின்றனர். ஆனால், நிச்சயமாக அந்த பணபலத்தை தமிழ் இன உணர்வு வெல்லும். அதோடு கருணாநிதியின் அரசியல் முடிந்துவிடும்.


A1 கொழும்பு
போட்டோ ஸ்ருடியோ & விடியோ
2 பாஸ்போட் $5.00 2 லான்டட் காட் $5.00
2 சிற்றிசன் $5.00 - 2 அனைத்துவிதமான ஐ. டி.$5.00
3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ $15.00
From: அல்பத்துடன் போட்டோ PACKAGES
25 - 5X7 பிறந்த நாள் போட்டோக்கள் $50.00
50 - 5x7 முதல் நன்மை $100.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $100.00
100 - 5x7 திருமணவிழா $200.00
10- 5x7 Graduation போட்டோக்கள் பாடசாலையில் $50.00
2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, Web: www.tamilsyellowpeages.com
Mobile: 416-752-4444 Tel: 416-755-2333



REDEVELOPMENT PROPERTY WITH MOTEL FOR SALE



- Prime property by river in downtown Niagara Falls.
- A short walk from train and bus stations.
- Designated “Major Commercial” in the Official Plan.
- Potential for high-rise residential redevelopment.
- Eligible for local and regional government incentives under City's Community Improvement Plan.
- Currently houses 33-room motel with outdoor heated pool and attached four-bedroom house.

Inquires Tel: **416-669-3101**

# அடங்காப்பற்றில்...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிவித்துள்ளது. இது லிபரல் கட்சிக்கு விழும் என எதிர்பார்க்கப்படும் தமிழர்களின் வாக்குகளை திசைதிருப்பி புதிய ஜனநாயகக்கட்சிக்கு விழச்செய்வதால் ரொறொன்ரோவில் வழமையாக லிபரல் கட்சி வெற்றிபெறும் தொகுதிகளில் பழமைவாதக்கட்சி வெற்றிபெறும் வாய்ப்பை




பெறும் என்ற நோக்கத்துடனேயே வெளியிடப்பட்ட நன்றி நவிலல் எனக்கூறியுள்ளது.

ஒன்ராரியோ நாடாளுமன்றத்தில் மே 14, 2009 உரையாற்றிய முதல்வர் டால்ரன் மக்கின்ரி "இலங்கையின் வடபகுதியில் 100 க்கு மேற்பட்ட சிறுவர்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளார்கள். இதில் இறந்தவர்களில் அரச படையினரோ அல்லது புலிகளினதோ எண்ணிக்கை சேர்த்துக்கொள்ளப்படவில்லை. கனடிய மத்திய அரசும், ஐக்கிய நாடுகள் சபையும் போரிடும் இருபகுதியினரும் சண்டையை நிறுத்தி ஒரு முடிவுக்கு வர வலியுறுத்தவேண்டும் எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ஊடகவியலாளரும், சர்வதேச உதவிநிறுவனங்களும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களும் போர்நடைபெறும் பகுதிக்குச் செல்ல வழிவகுக்க வேண்டும். ஒன்ராரியோ மக்களுக்கு உலகில் மனிதஉரிமை மீறல் நடைபெறும் இடங்களில் அவற்றுக்கெதிராக குரல்கொடுக்கவேண்டிய கடமை இருக்கின்றது. முதல்வர் மே 13ஆம் திகதி ஒன்ராரியோ நாடாளுமன்ற முன்றலில் நடைபெற்ற பேரணியே வரலாற்றில் அதிகூடிய மக்கள் கலந்து கொண்டு குயீன்ஸ் பார்க்கில் நிகழ்திய நிகழ்வு என்றார். ஒன்ராரியோ நாடாளுமன்ற பழமைவாதக்கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுகையில் "தாங்களும் இலங்கையின் பிரச்சினைக்கு நல்ல முடிவு வரவேண்டும் என விரும்புவதாகவும் கனடாவில் பேரணி நடத்தும் மக்கள் கடந்தவாரம் நெடுஞ்சாலை மறித்து சட்டத்தை மீறியது போலல்லாமல் சட்டத்தை மதித்துப் பேரணி நடத்தவேண்டும்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

மனிதாபிமானப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் பேரழிவு ஒன்றைத் தவிர்க்கமுடியாது என்று அமெரிக்க அதிபர் ஒபாமா முதல் தடவையாக இலங்கை விவகாரத்தில் கடும் எச்சரிக்கை ஒன்றை புதனன்று ஊடகவியலாளர் மத்தியில் விடுத்துள்ளார். இலங்கையில் ஒரு மனிதாபிமானப்பிரச்சினை உருவாகியுள்ளது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். போர்ப்பகுதியில் இருந்து அண்மைக்காலத்தில் கிடைக்கும் செய்திகள் மிகவும் கவலையளிப்பதாக இருக்கின்றது. இப்பகுதியில் 1000 கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு எந்த விதமான வசதிகளும் இல்லாமல் உணவு, குடிநீர், மருந்து மற்றும் வதிவிட வசதி எதுவுமில்லாமல் அகப்பட்டுள்ளார்கள். இது பாரிய அவலநிலையை தோற்றுவித்திருப்பதுடன் 1000 கணக்கான மக்கள் இதனால் உயிரழியும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இந்த மனிதாபிமானப்பிரச்சினை ஒரு பேரழிவாக மாற்றமடைந்துவிடும். இந்தப்பிரச்சினையுடன் சம்மந்தப்பட்ட அரசியல் விவகாரங்களை ஒருபுறத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு போரில் அகப்பட்டுள்ள அப்பாவி ஆண்கள் பெண்கள் சிறுவர்களின் உயிர்களையிட்டுதான் நாம் முதலில் எமது கவனத்தைச் செலுத்தவேண்டிய தருணம் இப்போது வந்துள்ளதாக நான் கருதுகிறேன்.

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் வேண்டுகோளை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் வரவேற்றுள்ளார். இலங்கையில் நிலையான போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும் ஒத்துழைக்கத் தயார் என்று பா. நடேசன் தெரிவித்துள்ளார். இலங்கையில் தமிழர்கள் அனுபவித்து வரும் பெரும் துயரங்கள் பற்றி இரக்கத்துடன் பேசியதற்காகவும் இலங்கையில் நடைபெற்று வரும் மனிதநேயமற்ற சிக்கல்களைத் தீர்க்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியதற்காகவும் அமெரிக்க அதிபர் ஒபாமாவிற்கு இலங்கையிலும் உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர் நன்றியையும் வரவேற்பையும் தெரிவிக்கிறோம். ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டிய மரபுவழி மனித நேயப் பொறுப்பிலிருந்து பின்வாங்கி விட்டன. எனவே இப்பொறுப்பை அமெரிக்க அரச தலைவர் ஏற்று முன்னடத்திச் செல்லவேண்டும் என்று எமது மக்கள் எதிர்பார்க்கின்றனர். இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டு இறுதித்தீர்வு எட்டப்படும் வரை தமிழர்களைப் பாதுகாப்பதற்காகவே நாங்கள் ஆயுதம் ஏந்துகின்றோம்.

அமெரிக்க அரச தலைவரின் கருத்துக்களை ஏற்க சிறிலங்கா அரசு மறுப்பு. போர் நிறுத்தம் ஒன்றிற்கு அனைத்துலக நாடுகளும் அழுத்தம் கொடுத்து வருகின்றன. ஆனாலும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் எதுவுமில்லையென இலங்கை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவித்துள்ளார். பிரித்தானிய அரசு இலங்கை அரசின் மீது போர்க்காலக் குற்றம் சுமத்தப்படலாம் என எச்சரித்துள்ளது. பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் எல்லாக்கட்சிகளையும் சேர்ந்த கிட்டத்தட்ட முழுபிரதிநிதிகளுமாகச் சேர்ந்து எடுத்த தீர்மானத்தில் உலக நாடுகள் இலங்கை அரசுக்கெதிராக கடும்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பொருளாதாரத்தடை கொண்டுவரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய வெளி விவகார அமைச்சர் பில் ராம்மெல் பேசும்போது ஐக்கிய நாடுகள் சபை 65000 பொதுமக்கள் இறந்துள்ளதாக கூறியுள்ளது அதிர்ச்சியளிக்கிறது என்று கூறியுள்ளார்.


ஒன்ராரியோ நாடாளுமன்ற முன்றலில் கடந்த 12 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வந்த குணம் அவர்கள் லிபரல் கட்சியைச் சேர்ந்த ஒன்ராரியோ முதல்வரும், புதிய ஜனநாயகக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க தனது உண்ணாவிரதத்தை முடித்துள்ளார்.



SMILE....
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days

காலம்

அங்கதம் ஆறாத கதை சொல்லலுக்கு
ஐம்பது ஆண்டுகள்
அ.முத்துலிங்கம் எனும் அங்கதம் ஆறாத கதைசொல்லியின்
ஐம்பது ஆண்டுகள் இலக்கியப்பணி- ஒரு நிகழ்வு
23 May, Saturday 20009 (5pm- 7pm)
Munk center, 1 Deronshire place, Toronto University
சிறப்பு பேச்சாளர்: கருணாகர மூர்த்தி (எழுத்தாளர்- ஜேர்மன்)
சிறப்பு விருந்தினர்: எம்.ஏ. நு.ஃமான் (தமிழ்துறைத் தலைவர், பேராதனை பல்கலைக்கழகம்)
வாழும் தமிழ் புத்தகங்களின் கண்காட்சியும் இடம் பெறும்(12pm-7pm)






kalam@tamilbook.com/ 416-7311752

# பேரண்டக் கதை - கலிலியோ

கலிலியோவின் கண்டுபிடிப்புகள் அரிஸ்ரோற்ர லின் முடிவுகளுக்கு முற்றிலும் முரணாக இருந்தன. அக்காலத்தில் அறிவியல் துறையின் விளக்கங்கள் எல்லாமுமே அரிஸ்ரோற்ரலின் முடிவுகளின் அடிப்படையில் இருந்தே பார்க்கப்பட்டன. மேலும் பேரண்ட விளக்கங் களும் மதங்களின், குறிப்பாக கத்தோலிக்க மதத்தின் நம்பிக்கைகளை வலுப்படுத்துவன போல் இருக்கவே, அரிஸ்ரோற்ரலின் பேரண்ட விளக்கம், கத்தோலிக்கத் திருச்சபையினரால் தத்தெடுக்கப்பட்டு, வலிமையுடன் பவனிவந்து கொண்டிருந்த காலம். ஆனால் கலிலியோ பேரண்டத்தில் உள்ள பொருட்களின் நடத்தைகளுக்கும் பேரண்டத்தின் அமைப்புக் கும் புதுவிளக்கங்களும் வடிவமும் கொடுக்க, பிரச்சினை ஆரம்பமாகிப் பூதகரமாகியது. கத்தோலிக்கரான கலிலியோவே கத்தோலிக்கத் தின் நம்பிக்கைகளை உடைத் தெறியக் கூடியதான முடிவுகளைத் தமது ஆய்வுகளின் ஊடாகப், போதுமான ஆதாரங்களுடன் கொடுத்தது. திருச்சபையின் மேலிடத்திற்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. முடிவாக கலிலி யோவின் மீது நடவடிக்கைள் எடுக்கப்பட்டன.

1616 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரோம் நகரத்திற்கு கலிலியோ அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இவரது கருத்துகள், கண்டுபிடிப்புகள் மறுக்கப்பட்டன. இவரது தொலைக்காட்டியின் ஊடாக வான்பரப்பினைப் பார்க்கவே மறுத்துவிட்டனர், இவர்மேல் குற்றம் சுமத்தியவர்கள். (அன்று சாத்தானின் கருவி என வர்ணிக்கப்பட்ட தொலைக்காட்டிதான் இன்று அரிய பல கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரமாக உள்ளது) முடிவாக, கலிலியோ இனிவரும் காலங்களில் வான்பரப்பு பற்றிய ஆய்வுகளில் நின்றும் விலத்த வேண்டும் எனவும், கொப்பநிக்கசின் கதிரவ மையப் பேரண்டமாதிரியை ஆதரித்துப் பேசவும் கூடாது. கற்பிக்கவும் கூடாது என்ற கடுமையான ஆணையுடன் விடுவிக்கப்பட்டார். மேலும் அவரால் கூறப்பட்ட முடிவுகள் தவறானவை எனக் கூறும்படியும் நிர்பந்திக்கப்பட்டார். வேறுவழி யின்றி அவற்றிக்கெல்லாம் 'ஆமாம் சாமி' போட்டுவிட்டு வந்துவிட்டார் மனவருத்தத்துடன்.



பிரபஞ்சம் - 40

இருப்பினும் கலிலியோவினால், தான் கண்டுபிடித்த உண்மைகளில் இருந்து விலத்தவோ அல்லது தன்னை விடுவிக்கவோ முடியவில்லை. 'மீண்டும் வேதாளம் முருங்க மரத்தில் ஏறியது' என்பது போல மெதுவாகத் தனது கருத்துக்களை பரவவிட்டார். அக்காலத்தில் தான் மிகவும் பிரசித்தி பெற்ற கலந்துரையாடல் போன்ற புத்தகத்தை வெளியிட்டார். அப்புத்தகத்தில் அரிஸ்ரோற்ரலின் பேரண்ட அமைப்பைப் பற்றியும், கொப்பநிக்கசின் பேரண்ட மாதிரியைப் பற்றியும் விவாதம் போன்ற கலந்துரையாடலை கலிலியோ எழுதியிருந்தார். முடிவில் கொப்பநிக்கசின் மாதிரியை ஏற்றுக் கொள்ளத்தக்க வண்ணம் இருப்பது போல் கலிலியோ காட்டியிருந்தார். இதனால் கோபமுற்ற மதத்தலைமைப்பீட அதிகாரசபை மீண்டும் கலிலியோவை விசாரணைக்கு 1632ஆம் ஆண்டில் அழைத்தது. குற்றவாளியாகக் கருதிய அதிகாரபீடம் அவருக்கு கடுமையான தண்டனையைக் கொடுத்தது. எந்தவிதமான விண்வெளி ஆய்வுகளும் செய்யக்கூடாது என தடைச்சட்டம் போட்டதுடன் ஆயுட்சிறையும் வழங்கியது. அந்நேரத்தில் (1633இல்) கலிலியோ நோயாளியாகவும், வயது முதிர்ந்தவராகவும் இருந்த காரணத்தால் ஆயுட் சிறைத்தண்டனையை வீட்டுக்காவலாக மாற்றினார்கள்.

திருச்சபையின் அங்கத்தவர் முன்னிலையில் முழந்தாள் படியிட்டு, தான் கண்டுபிடித்தவை, சொன்னவை எல்லாம் தவறானவை எனக் கூறும்படி பணிக்கப்பட்ட கலிலியோ அப்படியே செய்தார். ஆனாலும் அவ்வாறு செய்தபின் எழும்பி வரும்போது 'இன்னமும் அவை சுற்றுகின்றன' என கலிலியோ முணு முணுத்ததாகக் கூறிக்கொள்ளுகின்றார்கள்.

வீட்டுச்சிறையில் பெரும்பாலும் தனிமையில் இருந்த கலிலியோ தமது இறுதிக்காலத்தில் பார்வையையும் இழந்துவிட்டார். இறுதியில் 1942ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம்நாள் இயற்கை எய்தினார். திருமணம் செய்யாத சம்சாரியான கலிலியோவின் வாழ்க்கைச் சரிதமானது சுவாரிசியமானது, ஆச்சரியமான திருப்பங்களைத் தன்னகத்தே கொண்டது. பலதொல்லைகளைச் சந்தித்துச் சமாளித்த கலிலியோவினால் தமக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நியாயமற்ற வழக்கினை வெற்றி பெற முடியவில்லை. ஆனாலும் விஞ்ஞான உலகின், வானவியலின் திருப்பு முனையாக இருந்த பௌதீக விஞ்ஞானியாக, வானவியலாளராக கலிலியோவை இந்நாளின் அறிவியல் மேதைகள் காணுகின்றார்கள். விஞ்ஞானத்தின் தந்தை எனக் கூறப்படும் கலிலியோ இல்லாதிருந்திருந்தால் விஞ்ஞானம் முன்னேற்றம் அடைவதற்கு இன்னமும் சில காலம் எடுத்திருக்கும்.

இத்துடன் பேரண்டக்கதையின் இரண்டாம் பகுதியை முடித்துக்கொள்வோம். அடுத்த முறையில் இருந்தே பேரண்டக்கதையின் இறுதிப்பகுதிக்கு வருவோம். இப்பகுதியில் பெரும்பாலும் தனிஒரு நாயகனாகப் பாராமல் பலரது கூட்டு முயற்சியின் பயனாகப் பெறப்பட்ட முடிவுகளையே பார்க்கப்போகிறோம். ஆனாலும் கூட இப்பகுதியினை, கெப்பினர் கலிலியோ ஆகியோர் எடுத்துக் கொடுத்த இடங்களில் இருந்து தொடங்கி ஒரு உறுதியான நிலைக்கு கொண்டு வந்த எல்லோருக்கும் தெரிந்த நியூட்டனுடன் ஆரம்பிப்போம்.

*மறு இதழ்வரை*
*காத்திருங்களேன் தயவுடன்.*



**- கனி -**




Niru
நிரு
பிராண்ட்
Niru
BRAND
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
Niru BRAND
300g.e

# மன அமைதியே மனிதனின் தேவை

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

இன்றைய மருத்துவ உலகம் பிணிகளிலிருந்து மனிதனுக்கு பாதுகாப்பு அளிப்பதில்லை. மனிதனை பிணிகளுக்கு அடிமை யாக்குகின்றது. மருந்துவகைகளைச் சாப்பிடாமல் உயிர்வாழவே முடியாது என்ற பரிதாபரமான பாதுகாப்பற்ற நிலைக்கு நாம் வந்துவிட்டோம். மனிதன் மருந்துகளைச் சாப்பிட்டு உயிர்வாழ விரும்புகிறான். ஆனால் மருந்துகளோ மனிதனைச் சாப்பிட்டு அவனது ஆரோக்கிய நிலையை அணுவணுவாக சிதைக்கின்றன.

பொதுவாக கனடா போன்ற வளர்ச்சியடைந்து நாடுகளில் நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களிடையே தற்கொலை செய்யும் மனப்போக்கு அதிகமாகவே இருக்கிறது. சித்தம் குலைந்து பித்துப்பிடித்தவர்களைப் போல காணப்படுகின்றனர். இவ்வாறான சூழ்நிலை வேகமாக வளர்ந்துவரும்போது மருத்துவத்துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டதாகப் பேசப்படுவதில் என்ன அர்த்தம் இருக்கமுடியும்.

### உடலும் உயிரும் மனமும்

மனிதனுக்கு உயிர் என்ற ஒன்று இருக்கிறது என்பது மட்டுமே இன்றைய மருத்துவ அறிஞர்களின் கவனத்தில் இருக்கிறது. மனிதனிடம் மனம் என்ற ஒன்று அமைந்துள்ளது என்ற நினைவு மருத்துவ நிபுணர்களின் கவனத்தில் ஏற்படுவது மிகவும் குறைவு. இந்த குறைபாட்டின் விளைவுதான் வாழ்க்கையின் பிற்பகுதியில் மனச் சிதைவு ஏற்பட்டு பரிதாபகரமான நிலைக்குத் தள்ளி விடுகிறது. இந்த நேரத்தில் மனிதனுக்குத் தேவையான சரியான பரிகாரம் மன அமைதி ஒன்றுதான். அந்த மனஅமைதி கிட்டும் போதுதான் மனிதன் மனிதனாக வாழமுடியும். இல்லாது விடின் மிருக இயல்புகளின் இருப்பிடமாக அவன் நிலை குலைந்து அழிவதை யாராலும் எந்த சக்தியாலும் தடுக்கவே முடியாது. இந்த சூழ்நிலையில் மக்களுக்கு யோக பயிற்சி (Yoga Practice) வெற்றிகரமான வகையில் புனர்வாழ்வு அளிக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் உலக வாழ்வில் நேரும் துன்பங்களை வெற்றிகொண்டு மனிதன் தன் மனத்தைத் தனது ஆளுமைக்கு உட்படுமாறு செய்து வாழக்கூடிய முயற்சியில் யோகாசனப் பயிற்சியே. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து பார்த்த நிலையில் உடலியல் மனவியல் குறைபாடுகளுக்கு யோகா (Yoga) ஒரு அற்புதமான சிகிச்சை முறை என்பதை அமெரிக்கா போன்ற நாடுகளில் உடலியல், மனவியல், அறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.



விஞ்ஞானம் வளர வளர வசதிகளும் பெருகிக் கொள்வதால் மனிதனால் மகிழ்ச்சியாக மன நிம்மதியுடன் வாழ்ந்துவிட முடியாது. ஆரம்பத்தில் சுகபோக வாழ்வுதான் மகிழ்ச்சியின் அடிப்படை என்பது போலத் தெரியும் காலப்போக்கில் அவைகளெல்லாம் எதிர்மறையான விளைவுகளையே தரும்.

### யோகாசனம் தரும் மனப்பயிற்சி மனவலிமை

சாதாரண உடற்பயிற்சிகள் உடல் நலனை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை. மனத்தின் நலன் காக்கவும் மனத்தை உறுதியடைச் செய்யவும் மனத்திலே சஞ்சலம், குழப்பம், கலக்கம் போன்ற கோளாறுகள் ஏற்படாமல் இருக்க உதவும் உடற்பயிற்சி அனேகமாக இல்லை என்றே கூறலாம்.

யோகாசனத்தின் அடித்தளமே மனப்பயிற்சி, மனவலிமை, மனத்தின் ஆரோக்கியம் ஆகியவற்றைக் குறித்ததாக இருக்கிறது. இதுதான் உடற்பயிற்சிக்கும் யோகாசனப் பயிற்சிக்கும் இடையேயுள்ள பெரிய வேறுபாடு. யோகாசனத்தின் சிறப்பும் பெருமையும் மகிமையும் இந்த மனோதத்துவ அம்சங்கள்தான். பொதுவாக ஒரு மனிதர் முறையான யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபடும் போது உடலின் பிரதான உறுப்புகள் என்று கருதப்படும் மூளை, இருதயம், சுவாசப்பைகள், கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றிற்கு இரத்த ஓட்டம் எதுவித இடையூறுமின்றி நடைபெறுகின்றது. இதனால் எந்தவித உடல் உபாதைகளும் பிணிகளும் நெருங்குவதில்லை. இதனால் மூளைக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவாய்ப்பில்லாததால் மனத்தில் பரபரப்பு இறுக்கம் ஏற்படாது அது அமைதியடைகின்றது.

யோகாசனத்தின் உயிரோட்டமான இலட்சியம் என்ன? மனத்தையும் மனதில் எழும் எண்ணங்களையும் கட்டுப்படுத்துவதே யோகம் (Yoga). இப்பயிற்சியில் ஒருவர் முழுமை பெறும்போது அவர் தனக்குரிய தூய்கையும் பிரகாசமும் பொருந்திய நிலைக்குச் செல்கின்றான். குழந்தை இளைஞர், முதியவர், பலசாலிகள், பலயீனங்கள் அனைவருமே தத்தம் இயல்பு, உடல்நிலை, செயல்திறன் என்பதற்கு ஏற்றவாறு தொடர்ந்து யோகாசனம் செய்து வந்தால் உயர்ந்த நிலையை எய்துவதுடன் நீண்ட ஆயுளையும் பெறமுடியும்.

### காரணம் இல்லாத பதட்டம்


மனிதன் எந்த ஒரு காரணமும் இல்லாது ஒருவித பரபரப்பான மன நிலையுடன் வாழ்ந்து வருகிறான். எங்கும் எதிலும் ஒரே அவசரம் தன்னைப்பற்றியே ஆற அமர யோசித்துப் பார்ப்பதற்குக்கூட நேரம் கிடைக்காது. எந்த விடயத்திலும் ஒரு தெளிவு கிடையாது. உண்ணுவதும் உறங்குவதும், குடும்பம் நடத்துவதும், பொழுது போக்குவதும் எல்லாவற்றிலும் இயந்திர தன்மை வாய்ந்த ஒரு செயற்கை நிலையே உள்ளது. இந்த நிலைமை நீடிக்கும்போது நாளடைவில் உடல் நோய்வாய்ப்பட்டு நலிவடைந்து மனம் சோர்வடைந்து நடைப்பிணமாக மாறும் நிலைக்குத் தள்ளப்பட்டு இறுதியில் மரணத்தின் விளிம்புக்கு இட்டுச் செல்கிறது.

இந்த நிலையிலிருந்து மீள்வதற்கு யோகாசன பிராணாயாம, தியானப் பயிற்சிகளைவிட வேறெந்த மார்க்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே இந்த அற்புதமான பயிற்சியை ஒரு யோகாசன நிபுணரிடம் கற்று தினமும் குறைந்தது 20 நிமிடமாவது பயிற்சி செய்து வரும்போது மனத்தில் ஒரு தெளிவும் (Peace of Mind) உடலில் தென்பும் உறுதியும் ஏற்பட்டு நீண்டநாள் இனிது வாழலாம் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033** after 7:00pm


**APARTMENTS FOR RENT**



***In a NEWLY Renovated High-Rise Apartment Building Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby***

**Pl. Call: 416.264.2818**

**YOGA - MEDITATION CLASSLESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகுகளுக்கு: ***Scarborough - Markham -*** செல்வ சோதி - ***416.289.2033***
***Etobicoke, Woodbridge, Brampton - Harani - 416.270.1687***

# பன்றிக்காச்சல்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

**பெருவாரியாகப் பீடிக்கும் சளிக்காய்ச்சலை எதிர்கொள்ளத் திட்டமிடல்**



பெருவாரியாகப் பீடிக்கும் சளிக்காய்ச்சலை எதிர்கொள்வதற்கான திட்டம் ஒன்றை ரொறொன்ரோ மாநகரம் நன்கு வகுத்து வைத்துள்ளது. தற்பொழுது கிளர்ந்தெழுந்துள்ள நோயை எதிர்கொள்வதில் ஏனைய மாநகரப் பகுதிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு உதவும் வழிகாட்டியாக அதனை அது பயன்படுத்தி வருகிறது. இதில் பங்குபற்றும் சுகாதார சிகிச்சையகங்கள், வைத்தியசாலைகள், தொண்டு முகமையங்கள் தனியார் துறைக் தொழிலகங்கள், சமயங் குழுமங்கள், சமூக நிலையங்கள் போன்ற சமூகத் தரப்புகளுடன் இணைந்து பெருவாரியாகப் பீடிக்கும் இத்தகைய நோய் பற்றிய விழிப்புணர்வை நாங்கள் மேம்படுத்தி வருகிறோம். தமது அவசர பதில் நடவடிக்கைத் திட்டங்களை மீள்நோக்கி, பெருவாரியாகப் பீடிக்கும் சளிக்காய்ச்சலை எதிர்கொள்வதற்கான திட்டங்களை புதுப்பித்து அமைக்கும்படி எங்களுடன் பங்குபற்றும் சமூகத் தரப்புகள் அனைத்தையும் நாங்கள் இந்த வேளையில் ஊக்குவிக்கிறோம். உங்கள் அமைப்பில் பன்றிக் காய்ச்சல் நோயை எதிர்கொள்வது பற்றிய மதியுரை உங்களுக்குத் தேவைப்பட்டால், இணைப்புத் தலைமையாளர் லிஸ் ஜான்செனுடன் (Liz Janzen) தொடர்பு கொள்ளவும் - janzentoronto.ca

மேற்படி சமூக அமைப்புகள், நம்பத்தகுந்த தகவல் மூலங்களைப் பயன்படுத்தி, புதிய விபரங்களை பெற்று, பொதுசுகாதார அதிகாரிகள் வழங்கும் மதியுரையின்படி ஒழுகுவது மிகவும் முக்கியம்.

மேலதிக விபரங்களுக்கு புதிய உள்ளூர் விபரங்களுக்கும் நாடவும். www.toronto.ca/health. பயண விபரங்களுக்கு அழைக்கவும் 1.800.454.8302 அல்லது நாடவும் www.phac-aspc.gc.ca. சுகாதாரம் பற்றிக் கேட்டறிவதற்கு Telehealth Ontario ஐ அழைக்கவும். 1.866.797.0000. உங்கள் மொழியில் விபரம் பெறுவதற்கு உங்கள் மொழியின் பெயரை ஆங்கிலத்தில் கூறவும். பன்றிக்காய்ச்சல் பற்றிய பொதுப்படையான விபரங்களுக்கு Serviceontarioinfoline ஐ அழைக்கவும் 1.800.476.9708.

மருத்துவர் டேவிட் மைக்கேயோன்
சுகாதார மருத்துவ அதிகாரி
ரொறொன்ரோ பொதுசுகாதார துறை

# பிள்ளையும்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

என்ன தவறு என்று நீங்கள் கேட்கலாம். இங்கு ஒரு உண்மையை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். எனது குழந்தை மற்றைய குழந்தைகளை விட உயர்ந்தது என்ற மனப்பாங்குடன் வளரும்போது வாழ்க்கையில் ஏற்படும் சிறிய தடங்கல் அல்லது தோல்வியைக் கூடத் தாங்கமுடியாத உறுதியற்ற மனநிலைக்கு நாம் உரம்போடுவதாக அமையும். இதனால் தான் உயர்வு தாழ்வற்ற மனநிலைக்கான அடிப்படைகளை நாம் உருவாக்கவேண்டும். அதாவது ஒவ்வொரு குழந்தையும் தனித்துவ மானதும் ஒப்பீட்டு ரீதியில் சமத்துவமானதும் என்ற முறையில் வளர்க்கப்படல் அவசியம். இதற்கு ஒருதாயின் பங்களிப்பானது நல்ல உணவுடன், நல்ல நடத்தைகள், நல்ல வார்த்தைகள், பொருத்தமான பாராட்டுக்கள், தன்னைப்பற்றிய உயர்வான எண்ணங்களை உருவாக்கும் வழிமுறைகள் என்பனவற்றையும் ஊட்டுதல் வேண்டும். இத்தகைய தேவைப்பாடுகள் ஒரு தாயின் தாயாவதற்கு முன்னர் இருந்த வாழ்வியல் நடைமுறைகளில் பெரியதொரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றனர்.

ஆம் வாசகர்களே!
ஒரு குழந்தையின் உடலியல்வளர்ச்சியில் அக்குழந்தையின் தாய்க்கு இயல்பாகவே இருக்கும் அபரிதமான அக்கறையும் கண்காணிப்பும் அந்தக் குழந்தை ஒரு சுகதேகியாக உருவாக்குவது போன்று அக்குழந்தையின் உளவளர்ச்சியின் மீதும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். குழந்தைக்கான உணவைத் தெரிவு செய்வதில், உடல் நலத்தைப் பராமரிப்பதில் ஒரு தாயின் பங்களிப்பு எவ்வளவு தூரம் அவசியமோ அதேபோன்று அக்குழந்தையின் உயர்ந்த மனோபாவ வளர்ச்சிக்கும் தாயின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. குழந்தைகள் இயல்பாகவே தாயுடன் அதிக இறுக்கத்தையும் இணக்கத்தையும் கொண்டிருப்பதால் இந்த இறுக்கமும் இணக்கமும் சிறந்த மனோபாவங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகளைத் தருகின்றன. ஒரு குழந்தையின் உள்ளத்தில் எதை விதைத்தாலும் அது மிக வேகமாக விருட்சமாக வளர்வதால் சிறந்த உயர்ந்த மனோபாவங்களை விதைப்போம். ஏனெனில் சிறந்த விதை - சிறந்த மரம் - சிறந்த கனிகள். மீண்டும் சிறந்த கனிகள் - சிறந்த விதைகள் - சிறந்த மரங்கள் எனப் பலமடங்கு பெருகும். இதுவே ஒரு தாயின் சிறப்பாகும். ஏனெனில் உலகில் சிறந்தவர்களாக முன்னோடிகளாக வாழந்த வாழ்பவர்களில் அதி பெரும்பான்மையானவர்கள் தங்களது சிறப்புக்கு காரணம் தமது தாய்மாரே என்கின்றார்கள். எனவே சந்தர்பத்தைத் தவறவிடாதீர்கள்.

**அன்னையர்க்கு சமர்ப்பணம்.**




## இலவசம்! இலவம்! இலவசம்!
## Free Accident Claim Services

### *Motor Vehicle Accident*

- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?
- உங்கள் வாகன விபத்துக் கோரிக்கையை முற்றிலும் இலவசமாக செய்து கொள்ள விரும்புகிறீர்களா (Free Accident Claim)
- வாகன விபத்தில் வலி, வருத்தம், காயம், உடல் உபாதை அல்லது மனநல பாதிப்பு ஏற்பட்டதா?
- வாகன விபத்தினுள், விபத்து உங்கள் தவறானாலும் அல்லது உங்கள் தவறாக இல்லாவிட்டாலும் பெரும் தொகை பணத்தினை நட்ட ஈடாக பெற விரும்புகிறீர்களா?
- பல வருட அனுபவம் மிக்க எங்கள் வழங்கறிஞர்களின் (Lawyers) இலவச ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
- Licenced and Excellent Physiotherapy, Doctors, Lawyers & Assessment Services.



*Legal Defence Team Inc.*
*220 Duncan Mills Dr.*
*Suite 519, Toronto, ON (Donmills &Sheppard)*

**Call: Suresh : 416-276-0059**
[24 மணிநேர தமிழில் சேவை]
**Fax: 416-385-1804**

***Our Services:*** Scarborough, Markham, Mississauga, Richmond Hill, Aurora, New Market, Brampton, Pickering

- உங்களுக்கு உதவுவதே எங்கள் நோக்கம். பிறரிடம் சென்று ஏமாறு முன் எங்களை ஒரு முறை அழைத்து ஆலோசனை பெறுங்கள்.
- எமது அனைத்து சேவைகளும் 100% சட்ட ரீதியானவை.



## கடன் பிரச்சினையில் தவிக்கிறீர்களா?

- கடன் சுமை தாங்க முடியவில்லையா?
- உங்கள் Credit பழுதாகிவிடும் என்ற கவலையா?
- உங்கள் வீடு, வாகனம், குழந்தைகளின் கல்வி என்பன பறிபோய் விடும் என்று ஏக்கமா?
- கவலை வேண்டாம். ஒருமுறை எங்களை அழைத்து இலவச ஆலோசனை பெற்ற பின் உங்கள் முடிவை எடுங்கள்.



### இதோ உங்களுக்கு உதவ சில சட்டரீதியான வழிவகைகள்

1. ***Consumer Proposal:*** உங்கள் Credit ஐயும் வீட்டையும் வாகனத்தையும் இதர சொத்துக்களையும் பாதுகாத்தபடியே உங்கள் கடனை சட்டரீதியாக 60% த்தால் குறைத்து மிகுதி 40% த்தை மட்டும் மாதாந்தம் மிகச்சிறு தொகையாக கட்ட வழிசெய்தல்.
2. ***Debt Consolidation:*** உங்கள் அனைத்து கடன்களையும் ஒரு கடனாக்கி மாதாந்தம் மிகச் சிறிய வட்டியுடன் சிறு தொகையாக கட்ட வழி செய்தல். இதன் மூலம் உங்கள் Credit ஐ பாதுகாத்த படியே பெரும்பாலான வட்டிப் பணத்தை நீங்கள் சேமிக்க முடியும்.
3. ***Bankruptcy:*** அனைத்துக் கடன்களிலிருந்தும் 100% சட்டரீதியாக விடுபட உதவுதல்.
4. ***Line of Credit:*** ( Mini Score 680 and Min 2 years credit a must)
5. ***Criminal Problems, Traffic Ticket Problems***

Call:சுரேஸ் - **416-276-0059** **24 hrs. Hotline**
**Fax: 416-385-1804**

# அன்புத் தலைவர் ஒபாமா!



ஓ..!
எங்கள்
ஒபாமா

கத்தரீனாப் புயலில்
சிக்குண்ட
அமெரிக்க 'நியூஓர்லியன்ஸ்'
ஆபிரிக்கப் பரம்பரையின்
எங்கள்
உறவுகளை
முதலைகள் உண்டபோது
'பாசம்'
என்றொரு
கவிதை வெளியிட்டேன்

இந்த
இரு வருட வளர்ச்சியில்
இத்தகைய ஒரு
ஆச்சரிய மாற்றம்
யாரும்
எதிர்பார்க்காதது
இந்தப்
புதுமைச் சிந்தனை ஏற்றம்

ஓ..!
எங்கள்
ஒபாமா

உலகம்
எனும் ஓர் குடையின்கீழ்
வெள்ளை மாளிகையில்
குடிபுகுந்துவிட்டன,
ஒற்றுமை
சமத்துவம்
மகிழ்ச்சி
எனும் முச்சுடர்கள்

ஓ..!
எங்கள்
ஒபாமா

நாம்
நன்றி சொல்லவேண்டியது
'ஜனநாயகப்பண்பான'
இதயங்கொண்ட
அமெரிக்க மக்களுக்கே

ஓ..!
எங்கள்
ஒபாமா

அறிவு இரக்கம் நிறைந்த
தீர்க்கதரிசி
மாட்டின்லூதர்கிங்
கண்ட கனவை
நிஜமாக்கி
அரிய பெரிய
சாதனை படைத்த
புரட்சித்
தலைவன் நீ

மதம் மொழி
நிறம் வர்க்கம்
ஜாதி முதலிய
பிரிவற்ற
பொதுப்பண்பை
உலக மக்களுக்குக்
கற்றுக் கொடுத்த
உத்தமன் நீ

ஒடுக்கப்பட்ட மக்களுக்கும்
பெண்களுக்கும்
உயிர் கொடுக்கவென
மேற்கில் உதித்தெழுந்த
புதிய
சூரியன் நீ

மனிதத்தைக் கொல்லும்
'சித்திரவதை'
கூடத்தை அகற்றினாய்

உடல்வதை முறையை
சட்டத்தில் ஒழித்தாய்

யாருக்கும் எதிரிகள்
உலகில் யாருமில்லை
என்ற பேச்சொலியில்
ரஷ்யா, கியூபா, வெனிஸ்சூலா
இன்னும் பல
நாடுகளுக்கு ஓடிச்சென்று
அன்புக் கரம்பற்றினாய்

ஓ..!
எங்கள்
ஒபாமா

அடிமைத்தளை நீக்கிய
ஆபிரகாம்லிங்கனின்
நினைவு
மண்டபம்போல்
'ஒபாமா'
மண்டபம் ஒன்றும்
எதிர்காலத்தில்
பளிங்குக் கோபுரமாக
எழும்பட்டும்

உயர்ந்த
உன்
புதுமைப் பணிகள்
தினமும்
தொடரட்டும்

ஓ..!
எங்கள்
ஒபாமா..!



முத்துராஜா

# அரிக்கமேடு...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

கலைப்பொருள்கள் ஆகியவையும் கிடைத்துள்ளன. சுடுமண் பொம்மைகளில் மனித உருவங்கள் கலைநுட்பத்துடன் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக முடி, முலை, முகம் ஆகியவை சிறப்புடன் காட்டப்பட்டுள்ளன. உரோமானிய விளக்கு, மரச்சாமான்கள், வடகயிறு, மரச்சுத்தி முதலான மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் முதல் கிளிஞ்சல், சங்கு இவற்றால் செய்த பொருள்களும் அரிக்கமேட்டு அகழாய்வில் கிடைத்துள்ளன.



அரிக்கமேட்டைச் சுற்றியுள்ள ஊர்களில் பழங்கால மனிதர்களின் எச்சங்களான ஈமப் பேழைகளையும் முதுமக்கள் தாழிகளையும் மட்பாண்ட ஓடுகளையும் வரலாற்று ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். இங்கு கிடைத்துள்ள புதைகுழி, கல் வட்டங்கள், முதுமக்கள் தாழிகள், மணிகள், மட்பாண்ட ஓடுகள், சுடுமண் பொருட்கள் ஆகியவை வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனித வாழ்க்கை நிலையைக் காட்டுகின்றன. ஈமப்பேழைகளில் போர்க்கருவிகள், இரும்புப் பொருட்கள், சுடுமண் மணிகள், சுடுமண் பொருட்கள் ஆகியவை உள்ளன. அண்மையில் அரிக்கமேடு அருகிலுள்ள பொம்மையர்பாளையத்தில் கிடைத்த தொல் மனிதக் கூட்டை, அறிவியல் முறைப்படி ஆய்வு செய்தபோது, அதன் காலம் ஒன்றரை இலட்சம் ஆண்டுகளெனக் கண்டறியப்பட்டது. இதனால் அரிக்கமேடு பகுதியில் 1,50,000 ஆண்டுகளுக்கு முன்பே மனித இனம் வாழ்ந்திருந்ததாக கருதப்படுகிறது. இதனால் உலகில் மனிதன் முதன்முதலில் வாழத் துவங்கிய இடங்களில் ஒன்றாகவும் அரிக்கமேடு பகுதியைக்



குறிப்பிடலாம்.

அரியாங்குப்பத்து ஆறு, வெள்ளப் பெருக்கெடுத்தோடி மண்ணை அரித்து விடுகிறது. அப்படி அரிக்கப்பட்ட பகுதியே அரிக்கமேடு எனற பெயர் பெற்றது என்கிறார்கள் சிலர். அப்பகுதியில் அருகன் (புத்தன்) சிலை ஒன்று உள்ளது. இதனால், அருகன்மேடு என்று அழைக்கப்பட்டு, கால ஓட்டத்தின் அருக்கன்மேடு என மருவி, பிறகு அரிக்கன் மேடு என்றும் அரிக்கமேடு எனவும் வழங்கப்பட்டிருக்கலாம் எனவும் சிலர் சொல்கிறார்கள். இங்குள்ள புத்தர் சிலை பர்மாவிலிருந்து கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதனால் அது பர்மாக் கோயில் என வழங்கப்படடு, பின்னாளில் பிருமன் கோயில் என்றும் பிர்மன் கோயில் என்றும் மருவியது எனவும் கூறுகின்றனர். இப்பகுதியில் பௌத்தம் பரவியதென்பதற்கு இச்சிலையே சான்றாக உள்ளது.

அரிக்கமேடு, இன்று பழந்தமிழக அகழாய்வுக் காட்சிகள் எதுவும் காண முடியாத படி, மேட்டுப்பகுதியாகவும் மாமரத்தோப்புகளாகவும் மட்டுமே காட்சியளிக்கிறது. ஏனெனில் இங்கு ஆய்வு செய்த அறிஞர்கள், தங்கள் ஆய்வினை நிறைவு செய்த பிறகு அவற்றைப் பாதுக்காப்பாக மூடி விட்டிருக்கின்றனர். ஆனாலும், அரியாங்குப்பம் ஆற்றின் கரையோரம் மண்ணரிப்புகளுக்கு இடையே பழைய பானை ஓடுகள், செங்கல், கட்டடச் சுவர் அமைப்புகளின் எச்சம், சிறு சிறு மணிகள் ஆகியவை இன்றும் கீழே கிடக்கக் காணலாம். தொல்பொருள் ஆய்வுத்துறை ஏறத்தாழ 21 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்திப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக மாற்றி வைத்துள்ளது. இப்பகுதியில் கி.பி. 17ஆம் நூற்றாண்டு அளவில் கட்டப்பட்டதாக நம்பப்படும் கட்டிடச் சுவர்களின் மேல் பகுதியைக் காணலாம். அழகிய செங்கல் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடச் சுவரின் இடையே மிக அகலாமான, நீளமான கற்கள் இடம்பெற்றுள்ளன.

கடற்கோளோ, இயற்கைச் சீற்றமோ, சமய மதப் பூசல்களோ, அயல் நாட்டினரின் படையெடுப்போ இவற்றில் எதுவோ ஒன்று, பண்டைக் காலத்தில் பெருமைமிக்க ஊராகப் புகழுடன் இருந்த அரிக்கமேட்டை வரலாற்றின் பாதையில் இருந்து துண்டித்துவிட்டது. அரியாங்குப்பம் ஆற்றால் அரணிட்டுக் காக்கப்படும் அரிக்கமேட்டுப் பகுதியில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மேலும் பல தொடர் ஆய்வுகளை செய்தால, இன்னும் பல பழந்தமிழகத்தின் பெருமைகளும் கப்பல் வழி வணிகத்தில் தமிழர்களின் ஆற்றலும் வெளிப்படலாம்.

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

பாண்டிச்சேரிக்கு மிக அருகில் உள்ளது அரிக்கமேடு. சென்னையில் இருந்து கிழக்கு கடற்கரைச் சாலை, திண்டிவனம் என இரண்டு வழிகளில் பாண்டிச்சேரி செல்லலாம். 10 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து புறப்படுகிறது. புதுச்சேரியிலிருந்து அரிக்கமேடு செல்ல, கடலூர் சாலை வழியாக அரியாங்குப்பம் சென்று, அங்கிருந்து வீராம்பட்டினம் செல்லும் சாலையில் ஷகாக்காயந்தோப்பு' என்னும் சிற்றூருக்குச் செல்லவேண்டும். அரிக்கமேடு மிகச் சிறிய கிராமம் என்பதால், உணவு விடுதிகளும் தங்கும் விடுதிகளும் அங்கே இல்லை. எனவே, பாண்டிச்சேரியில் தங்கி செல்வது சிறப்பு.

வழிப்போக்கன்


GSF
Golden Store Fixtures
Friend for your Business
Toll Free: 1-877-565-6554
VISIT
OUR LARGE
SHOW ROOM
Our Latest LAUNCH
ROLLING BASKET
Free Estimate & Free Delivery (Over $100 Purchase)
Store Hours: Mon - Fri 8 - 5Pm & Sat - 9 - 1Pm
355 Admiral Blvd. Unit# 5
Mississauga, Ont, L5T 2N1
Tel: (905) 565 6555
Fax: (905) 565 8655
Web: www.goldenstorefixtures.com E-mail: info@goldenstorefixtures.com

# வாழ்வில் இறைநியதி அங்கீகரிப்பின் முக்கியத்துவம்

இறைநியதியின்படி வாழ்வு விரிவதை அங்கீகரித்து வாழாது, இதுவரை அதை மறுத்து முரண்பட்டதற்காக, என்னை மன்னித்திட இப்போ உடன்படுகின்றேன்.

'ஷ் ஷ் ஷ்..... சற்று அருகே வா! இதோ உனக்கே உனக்காக ஒரு செய்தி! உன்னைப்பற்றி ஒரு மேம்பட்ட அபிப்பிராயத்துடன், உன்னை நீயே ஊக்குவித்திட ஒரு செய்தி! வாழ்வில் இப்போ நீ செய்து கொண்டிருப்பதற்காகவோ, செய்யாமலிருப்பதற்காகவோ உன்னை நீயே கண்டித்துத் தண்டித்துத் துன்புறுத்திக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்து, என வாழ்வு உன்னை வேண்டுகின்றது. இவ்வாறு உன்னை நீயே குற்றம் சுமத்தித் தாழ்த்துவது வாழ்விற்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இது ஒருவித நன்மையையும் உனக்குச் செய்யவில்லை என்பது வாழ்விற்கு நன்கு தெரியும்.

உன்னைப்பற்றிக் குறைகூறி நீயே உன்மேல் சுமத்திக் கொண்ட குற்ற உணர்வுகளைப் பற்றி வாழ்வுக்கு நன்கு தெரியும். இத்தகைய உனது நடத்தை வாழ்வைத் திடுக்கிட வைக்கின்றது. உன்னால் செய்து நிறைவேற்ற முடியுமானவற்றை நிச்சயம் நீ செய்ய முடியும் போது கட்டாயம் நீ செய்வாய் என்பதும்



அதற்குத் தெரியும். நீ மட்டும் விரும்பி இடம்கொடுத்தால் வாழ்வின் நல்ல தேவதைகள் உனக்கு நிச்சயம் உதவி புரிவார்கள். உனக்கு உதவி அவசியமான நேரம் உனக்கு உதவக்கூடியவர்களிடம் நீ உதவி கேட்பாய் என்பதும் வாழ்விற்குத் தெரியும். குணப்படுத்திட வேண்டிய அவநம்பிக்கைப் பிரச்சினைகள் பல உனக்குள்ளிருப்பது வாழ்விற்குப் புரிகின்றது.

ஆகவே உனது சுயவிமர்சனம், சுயமதிப்பீடு, சுயநிந்தனை, சுயதண்டனை போன்ற பாதக-மான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக நீ நிறுத்திவிட வேண்டுமென்று, உனக்கு பாதகமான செயல்களில் நீ ஈடுபட்டதற்காக வாழ்வு உன்னை மன்னிக்கின்றது. நீயும் உன்னை மன்னித்து, இத்தகைய செயல்பாடுக-ளை உடனடியாக நிறுத்துமாறு உனக்குக் கட்டளையிடுகின்றது வாழ்வு.

உனக்குப் பூரண திருப்தி தரும் வண்ணம் செயல்படாததற்காக உன்னை நீயே விமர்சித்து, தண்டித்து இன்றுவரை மனம் வருந்திக் கொண்டிருந்திருக்கலாம். இன்றுவரை இவ்வாறு உன்னை நடத்தியதற்காக இன்று நீயே உன்னை மன்னித்துவிடு.

இன்று முதல் சகலவிதமான சுயவிமர்சனம், சுயநிந்தனை, சுயதண்டனை போன்றவற்றை அடியோடு கைவிட்டு எனைச் சூழ்ந்துள்ள இறைநியதியை அங்கீகரித்து முன்னேறிடக் கங்கணங்கட்டிக் கொள்கின்றேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 147

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி


NuTeK COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES





வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க

எந்தவித அடமானக் கடன்களும் பெற

Direct - 416.575.5055

Anton Jeeva, P.Eng.
Real Estate Broker
Principal Mortgage

RE/MAX

CONDO.FOR SALE
$199,900
McCowan & HWY 401



• Mccowan/Hwy 401
• 2 Bedrooms
• 2 Washrooms
• Elfs, Fridge, Stove, Newer Dishwasher, Built-In Microwave, Washer, Dryer, Window Coverings (Exclude Mbr Drapes), Broadloom W/ Laid .

Condo. for sale
$149,900



• 665 Kennedy Rd
• #510
• 401 / Mccowan
• 3 Bedrooms
• 2 Washrooms
• Fridge, Stove, Washer, Dryer, All Light Fixtures, Ceiling Fan

Condo. for sale
$175,000



• 2466 Eglinton Ave 1210
• Midland & Eglinton
• 2 + 1 Bedrooms
• 2 Full Washrooms
• Existing Elf's, Stove, New Fridge, New Dishwasher, Washer & Dryer.

HOUSE FOR SALE
$529,900



• 77 Forestbrook Dr
• 14th & 9Th line
• 2 - Storey Brick house
• 4 Bedrooms
• 4 Washrooms
• Fridge • Stove
• wawher & Dryer
• Centreal Vacuum
• Alarm System All Elf

HOUSE For Sale
$464,900



• 11 Bridport Cres.
• Brimley/ Mcnicoll/ Mccowan
• Bedrooms: 4 + 1
• Washroom: 4
• 2 Fridges, 2 Stoves, Washer, Dryer, Central Air, Central Vacuum

Condo. for sale
$249,900



• 83 Mondeo Dr. #112
• Birchmount & Ellesmere
• 2+1 Bedrooms
• 2 Washroom
• Fridge , Stove , Washer, dryer

HOUSE For Sale
$339,900



• 29 Sawdon Dr. Burns/Thickson, • Whitby
• Bedrooms: 4 + 2
• Washrooms: 4
• 2 parking
• Finished BSMT
• Fridge, Stove, Washer, Dryer, All Window Coverings

Condo. FOR SALE
$229,000



• Ellesmere & Birchmount
• 2 Bedrooms
• 2 Washrooms
Storage Unit! Appliances Incl - Billiards Room, Indoor Swimming Pool, Party Room, Basketball Court, Movie Room, Party Lounge, Bbq Terrace, Gym, Sauna, Guest Suites, Security Guard, & More

HOUSE For Sale
$339,000



• 154 Fitzgibbon Ave.
• Midland / Lawrence
• Bedrooms: 3 + 3
• Washrooms: 3
• 3 Stoves 3 Fridges , Washer, Dryer..

CDN Financial & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.

Speciallized in Power of Sale Homes



MAX 2000

விடுமுறை காலங்களில் சுற்றுலா செல்லத் தயாராகுங்கள்!

ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது கிழமை U. S. A பயணம்




மூன்று நாள் சுற்றுலா May 15 முதல் 18 வரை

Victoria Day Long Weekend New York City பயணம்

New York City சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், Shopping.

July 31 to August 06
Prince Edward Island சுற்றுலா

August Civic Holiday Long Weekend

Vancouver & West Cost 14 days

Plan Your Holiday Around These Dates

இவ்வாண்டு விடுமுறைக்கான பயண ஒழுங்குகள் ஏராளம் நீங்கள் தயாரா?

விபரங்களுக்கு: 416-609-2542